பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 20-8-61 ஞாயிறு | இதழ் 10

## என். எம். – பிலிப் உடன்பாடு

### பலமான இடதுசாரி முன்னணி உருவாகுமா?

பட்ஜெட் விவாதத்தின்போது பிலிப் ஆற்றிய உரை இலங்கை அரசியலில் ஒரு புதிய திருப்பத்துக்கு வழிவகுக்க முயற்சிக்கின்றது. அண்மைக்கால நடவடிக்கைகளால் அரசாங்கக் கட்சி மீது அதிருப்திகொண்டுள்ள சமசமாஜிகளை தன்வலையில் இழுக்க பிலிப் முயற்சிக்கிறார். இரு கட்சிகளும் ஒன்றுசேராவிட்டாலுங்கூட ஒரு பொதுத் திட்டத்தோடும் நோக்கத்தோடும் வேலை செய்வது நல்லதென பிலிப் கருதுகிறார். அரசாங்கக் கட்சித் தோழமையை உதறித் தள்ளத் துடித்துக்கொண்டிருந்த எட்மண்ட் சமரக்கொடிகோஷ்டியினரை இந்தக் கோரிக்கை பெரிதும் கவர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்க கட்சியிலிருந்து விலகிய பொரளை எம் பி. யும் இப்படியொரு உடன்பாட்டை விரும்புவதாகவும், அப்படி ஒரு உடன்பாடு ஏற்படும் பட்சத்தில் தானும் அதில் சேர்ந்து விடுவதாகவும் கருத்துத் தெரிவித்துள்ளாராம்.

என். எம், பிலிப், டயின் யூ டி சில்வா ஆகியோருக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டால் இலங்கை அரசியலில் ஒரு பலமான கோஷ்டி உருவாகும் என்பதில் ஐயமில்லை. நாட்டிலுள்ள பலமிக்க தொழிற்சங்கங்களில் பெரும்பகுதி இவர்கள் கையிலேயே இருக்கும்.

## சீமெந்து தொழிற்சாலை

# மோசடி நடந்தது எவ்வாறு?

### விசாரணையில் வெளியான உண்மை.

எங்கு மோசடி நடந்தாலும் பழியை ஏழைத் தொழிலாளிகள் மீது சுமத்துவதுதான் சுலபம். காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் இரண்டு லட்ச ரூபா மோசடியென்றதும் ஸ்தல பரிசீலனை நடத்த சீமெந்துதொழிற்சாலை கூட்டுத் தாபனத் தலைவர் திரு. ஜி.பி.வி. அமரசிங்காவும், ஜெனரல் மனேஜர் திரு. பொன்னம்பெருமாவும் வந்தனர். அவர்கள் பரிசீலனையின் முடிவு தொழிலாளிகளை நிரபராதிகளாக்கி விட்டது.

சீமெந்துப் பாக்கெட்டுக்குள் எவ்வளவு தான் திணித்தாலும் கூடியது 4 ருத்தல் சீமெந்துக்குமேல் போடமுடியாதென்ற உண்மையை அவர்கள் கண்டு பிடித்தார்கள். ஒவ்வொரு பாக்கெட்டிலும் 28 ருத்தல் சீமெந்து அதிகமாக நிரப்பப்பட்டு வெளியேற்றப்பட்டதென்பது தான் குற்றச்சாட்டு.

ட்ராக்டர் டயர்கள், மின்சார உபகரணங்கள், கார் பகுதிகள் பெருமளவில் கடத்தப் பட்டுவிட்டனவென்றால் அவைகள் மடியில் கட்டிக்கொண்டு போகும் பொருட்களல்லவேயென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்களாம்.

எப்படியோ பொருட்கள் வெளியேறிவிட்டனவென்றால் அவற்றுக்குத் தொழிலாளிகள் பொறுப்பாக இருக்கமுடியாதல்லவா? அப்போ யார் பொறுப்பாளர்கள்? இந்தக் கேள்விக்கு விடை எப்படியும் அம்பலத்துக்கு வரத்தான் போகிறது!



அழகி லின்டா கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவர். ஒரு கம்பனியில் வேலைபார்த்து வந்த இவருக்கு இலங்கையில் பிடிக்கப்பட்ட 'பிறிஜ் ஒன் த றிவர் குவே' என்ற ஆங்கிலச் சினிமாவில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உலகப் பிரசித்திபெற்ற அந்தச் சினிமாவில் நடித்த லின்டா, 'புதினம்' கதைப்பகுதியிலும் நடிக்கிறார். இந்த இதழின், 4-ம் பக்கத்தில், 'ரோசலின்' என்ற பாத்திரமாகி கவர்ச்சித் தோற்றங்கள் தருகிறார்.

**'புதினம்'**

சுவையான செய்திக் கிழமை இதழ்

ஓராண்டுக் கட்டணம் ரூபா 8-00

தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 8-00 அனுப்பிவைத்தால் கிழமைதோறும் அனுப்பிவைக்கப்படும்.

**'புதினம்'**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

புதினத்துக்கு விளம்பரம் சேகரிப்பதற்காக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பிரதிநிதிகளை நியமித்து விட்டோமாதலால், மேற்படி பதவிகளுக்காக இனிமேல் யாரும் விண்ணப்பம் அனுப்ப வேண்டியதில்லை. பெருந்தொகையானவர்கள் விண்ணப்பித்திருந்தபடியால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பதில் அனுப்ப முடியாமைக்காக வருந்துகிறோம்.

— நிர்வாகி, புதினம்.

## சோதிடம்

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**13-8 61 முதல் 19-8-61 வரை**

**மேடம்:** ஞாயிறு திங்கள் வாரங்களில் சில சங்கடங்கள் உண்டாகலாம். தொழில் சம்பந்தமான விஷயங்களில் அவதானமாக நடக்கவும் மிகுதி நாட்கள் லாபகரமானவை. ஆனால் தேக சுகம் தொடர்ந்து பாதிக்கப்படும்.

**இடபம்:** திங்கள் பிற்பகல், செவ்வாய் புதன் வாரங்களை அவதானமாகச் செலவிடவும். இனசனங்களாற் சங்கடங்களும், வாகனகஷ்டங்களும் ஏற்படலாம். பிற்பகுதியில் கஸ்டங்கள் சில நீங்கும். அன்னியருதவி உண்டு.

**மிதுனம்:** வார முற்பகுதியில் தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. நண்பர்கள்மூலமாகப் பலவித உதவிகள் கிட்டும். ஆனால் புதன் பிற்பகலாயும் வியாழன், வெள்ளி, வாரங்களையும் அவதானமாகச்செலவிடவும். வார இறுதி நன்மை பயக்கும்.

**கடகம்:** நேத்திர பீடை உண்டாகும். இனசனங்களுடன் சிறு விரோதங்கள் ஏற்படலாம். ஆனால் பூமிப் பிரயோசன பலனுண்டு. எதிர்ப்புகளையும் சமாளிக்க முடியும். வார இறுதியில் சில சங்கடங்கள் நேரிடலாம்.

**சிங்கம்:** தேகசுகம் தொடர்ந்துபாதிக்கப்படும். நண்பர்களுடன் சச்சரவுகளும் குடும்பத்தில் தப்பபிப்பிராயங்களும் ஏற்படலாம். நீங்கள் சுதந்திரத்துடன் கருமங்களாற்றுவதுகஷ்டமாக இருக்கும்.

**கன்னி:** செலவுகளதிகமாகும். கருமங்களை ஆரம்பிக்கும்போது சில எதிர்ப்புகள் காணப்பட்டாலும் முடிவில் வெற்றியுண்டு. வாகனுதிகளாற் பொருட் செலவுகள் ஏற்படும். சத்துரு ஜயம் உண்டு.

**துலாம்:** வீண் அபவாதங்களுக்கிடமுண்டு. நண்பர்களுடன் அவதானமாக ஊடாடவும். முன் முதலீடு செய்தவற்ருல் லாபமுண்டு. குடும்பத்தில் சிலசச்சரவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** அன்னியர் மூலமாகப் பலவித உதவிப் பேறுண்டு. நண்பர்களின் சகாயமும், கீர்த்தியும் உண்டு. பூமிப் பிரயோசன பலனும் கிட்டும். ஆனால் சிலகாரியங்களைக் குறித்து மனோ வியாகூலமேற்படும்.

**தனுசு:** கருமங்களை நீங்கள் நினைத்தவண்ணம் முடிப்பது கஷ்டமாக இருக்கும். தேக சுகம் பாதிக்கப்படும். ஆனால் பொருள் லாபமுண்டு. கீர்த்தியும் பூமி லாபமும் உண்டு. பிதாவழி பந்துக்களால் சங்கடங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்படும். தேகசுகமும் இராது. கருமங்களில் மிக அவதானமாக இருக்கவும். கடுஞ் சுரம் பிணி கண்டு மாறலாம்.

**கும்பம்:** குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாய் இருக்காது. தேகசுகவீனமும் உண்டு. புது விஜயங்களில் சிறிது நஷ்டம் ஏற்படலாம். ஸ்திரீகள் மூலமாகக் கலகங்கள் ஏற்பட இடமுண்டு.

**மீனம்:** முன்பிருந்த சங்கடங்கள் சில நீங்கலாம். சத்துரு ஜயமும் பொருள் விருத்தியும் உண்டு. குடும்பத்தில் சில சச்சரவுகள் காணப்படுகின்றன.

நாடக விமர்சனம்:

## 'கலைக்கோயில் கட்டிய காவலன்'

சினிமா உத்திகளை அபரிமிதமாக அனுவசியமாக உபயோகித்து நாடகக் கலையை கொலை செய்யும் பல நாடக மன்றங்கள் முளை விடும் இக்காலத்திலே, நாடகக் கலை உத்திகளை திறம்படக் கையாண்டு, 'கலைக் கோயில் கட்டிய காவலன்' என்ற நாடகத்தை உயரியமுறையில் அரங்கேற்றியுள்ளனர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியினர் சென்ற 2ம் 3ம் 4ம் திகதிகளில்.

கதை வேறொன்றுமல்ல; அரு. ராமனாதனின் 'இராஜராச சோழன்'தான். ஆனால் இதில் நடித்த மாணவிகளில், இராஜராசன், விமலாதித்தர், குந்தவி பாத்திரங்களை தாங்கி நடித்தோர் திறம்பட நடித்தனர். நடிப்பு அதி உன்னதம் என்று கூற முடியாதாயினும் மாணவிகளிடம் இதைவிட எதிர் பார்ப்பதும் முடியாது.

நாடகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் ஒவ்வொரு காட்சியிலும் அமைக்கப்பெற்ற பிரமாண்டமான கலைவண்ணம் மிக்க 'செற்றிங்குகள்' தான். தொடக்கம் முதல் இறுதி வரை நாடகத்தில் புனிதமும் கலையம்சமும் மிளிர்ந்ததுபோற்றத்தக்கதாகும். "பல ஆண்டுகளுக்குப் பிறகு நல்ல ஒரு நாடகத்தைப் பார்க்கிறேன்" என்றூர் என்னருகில் இருந்த ஒரு பிரபல எழுத்தாளர். ஆம் அறுபது புள்ளிக்கு மேல் தான் இந்நாடகத்துக்கு.

— பொன்முடி

## இப்பொழுதே உங்கள் ஓடர்களை அனுப்புங்கள்!

## 1962-ம் ஆண்டுக்கு—

# ஆனந்தா திருக்குறள் கலண்டர்கள்

மிகச் சிறப்பான முறையில் தயாராகிக்கொண்டிருக்கின்றன.

**ஆனந்தா திருக்குறள் கலண்டர் (No. 1)**

இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் விசேட தினங்களும், அரசாங்க வங்கி விடுமுறைத் தினங்களும், கொடியேற்றம் தேர்த்திருவிழா முதலியனவும், குருபூசைத் தினங்களும், பெரியோர்களின் நினைவு தினங்களும், இக்கலண்டரில் கிரமமாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இவை தவிர, நாள்தோறும் நட்சத்திரம், யோகம் சுபநேரம் ராகுகாலம் முதலியனவும் பிரம்மஸ்ரீ இரகுநாதையரவர்களின் வாக்கிய கணிதப்படி குறிக்கப்பெற்றுள்ளன.

**ஆனந்தா அறிவுரைக் கலண்டர் (No. 2)**

இவையும் திருக்குறட்கலண்டர் போலவே பல அம்சங்களும் பொருந்தி, திருக்குறளுக்குப் பதிலாகப் பொன்மொழிகள் தாங்கிய, நடுத்தர அளவான புளொக்குகளுடன் கூடியன

**ஆனந்தா மூன்றுதேதிக் கலண்டர் (No. 3)**

இவற்றில் ஆங்கில, தமிழ், முஸ்லீம் திகதிகளும், அமவாசை, பூரணை, அட்டமி, நவமி, முதலியவிசேடங்களும் குறிக்கப்பெற்றுள்ளன. பெருந்தொகையாக அன்பளிப்புக் கலண்டர்கள் கொடுக்கும் வர்த்தகர்களுக்கு மிக வாய்ப்பான அளவு.

**ஆனந்தா வாரக்கலண்டர் (No. 4)**

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிழிக்கக்கூடியதாக வாரத்துக்கு ஒரு தாள் வீதம் புதிய மாதிரியில் தயாரிக்கப்பெற்ற இக்கலண்டர் மிகக் கவர்ச்சிகரமானது. அன்றைய திகதியை மட்டுமன்றி, அந்த வாரத்தில் முன்பின்னாக உள்ள திகதிகளையும் பார்த்துக்கொள்ள வசதியானது. ஆங்கிலம், தமிழ், முஸ்லீம் மூன்று திகதிகளும் கொண்டது. வாடிக்கையாளருக்குப் பரிசளிக்க மலிந்த விலையில் மிகக் கவர்ச்சியான கலண்டர்! மற்றக் கலண்டர்களைப் போலவே தடித்த மட்டையில் ஒட்டிய படங்களைக் கொண்டது.

**ஆனந்தா றேல் கலண்டர் (No. 5)**

மாத சிலிப்புகளுடன் கூடிய இந்த றேல் கலண்டர்கள் கவர்ச்சியான எல்லாவித படங்களுடனும் தொகையாகக் கிடைக்கும்.

**விபரங்களுக்கு இன்றே எழுதுங்கள்!**


ஆனந்தா அச்சகம், 226, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.

தபால் தந்தி ஊழியர் மாகாநாடு

## கூச்சல் குழப்பம்

வடபகுதி தபால்தந்தி ஊழியர் சங்க வருடாந்த மகாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது தாய்ச்சங்கத் தலைவர் பலதடவை எச்சரித்த போதும் சபையில் அமைதியை நிலைநாட்ட முடியாமல் போய்விட்டது! ஆயினும் 'இத்தகைய கேவலமான கூட்டத்தை நடத்த முடியா'தென்று தலைவர் இடையில் எழுந்தபோதும்; தம்மீது பணமோசடிக்குற்றச் சாட்டுச் சுமத்தப் படவே செயலாளர்ஆத்திரத்தோடு வெளியேறிய போதும் அவர்களைச் சமாதானப்படுத்தி நிலைநிறுத்த அங்கேசிலநல்லவர்களும் இருந்தார்கள்!

பீலிக் டயஸின் ஒட்டப் பந்தயம்...




# திரை மறைவில்

## 'தடிபிடி'யின் பெறுமதி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கத் தலைவரான டாக்டர். டபிள்யூ.டி. சில்வா சுதந்திரக் கட்சியிலிருந்து இராஜினுமாச் செய்துவிட்டாரல்லவா? அதைப்பற்றிப் பல அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகளுடன் பேசினேன். "தடிபிடியின் பெறுமதியை அரசாங்கக் கட்சியிலுள்ள சிலர் இன்னும் உணரவில்லை. அவர் மிகவும் கெட்டிக்காரர்" என்று உதவி வர்த்தக அமைச்சர் திரு. டி. எஸ். குணசேகரா கூறினுர்.

## அடிபடும் பேச்சுக்கள்:

புதிய வரிகளை எதிர்க்கும் இயக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களிடையே பலமடைந்து வருகிறதாம்! எதிர்ப்பும், எதிர்ப்பும் பிரசாரம்பற்றிய பேச்சுக்களுமெல்லாம் அரசாங்க உத்தியோகத்தர்களிடையேயும்எதிர்க் கட்சிகளிடையேயும் பலமாக அடிபடுகின்றனவாம்!

## பிலிப்பின் தந்திரம்:

லங்கா சமசமாசக்கட்சியிலுள்ள பழைய நண்பர்கள் ''தன்னுடன் மீண்டும் சேரவேண்டுமென்று சனப் பிரதிநிதிகள் சபையில் பிலிப் குணவர்த்தன வேண்டுகோள் விடுத்தாரல்லவா? இடதுசாரிச் சக்திகள் நன்ருகத் திரண்டுகொண்டு நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவை ஆதரிப்பதன்மூலம் அரசாங்கக் கட்சியில் ஏற்பட்டு வரும் பிளவை விரிவுபடுத்தவேண்டும் என்பதே புரட்சித் தந்தையின் தந்திரமாக விருக்கிறதாம். அதனுல்தான் ''முட்டாள்களின் நடுவிலுள்ள ஒரேயொரு நிதியமைச்சர்'' என்று நிதியமைச்சரை வர்ணித்தார் பொரலகொடை வீரர்.

## சமசமாஜிஸ்டுகளின் தந்திரம்:

சமசமாஜக் கட்சியின் தந்திரம் வேறு விதமாக அமைந்திருக்கிறதாம்! இன்றைய சூழ்நிலைக்குப் பொறுப்பாளி நிதியமைச்சரே என்று பிரசாரம்செய்யப் போகிருர்களாம் அவர்கள். தாங்கள் காட்டிய சோஷலிசப் பாதையில் பின்பற்ற மறுத்தவர் அவர்தான் என்று சொல்கிருர்கள் அவர்கள். அரசாங்கக் கட்சியிலுள்ள பிளவில் நிதியமைச்சரை எதிர்க்கும் கோஷ்டியுடன் தங்களின் பலத்தையும் சேர்த்துக்கொள்ள அவர்கள் முடிவுசெய்திருக்கிருர்களாம். சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின்மூலம் தங்களின் கொள்கையை அமுல் செய்வதற்கு நிதியமைச்சர்தான் தடையாக இருந்ததாக சமசமாசக்கட்சி தலைவர்கள் கருதுகின்ருர்களாம்.

## கம்யூனிஸ்டுகளின் மற்றெருரு ஆதரவு

கம்யூனிஸ்ட் கட்சி வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்துவிட்டது! இந்த முடிவு யாவர்க்கும் ஆச்சர்யத்தை அளித்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்சங்கம் புதியவரிகளை வன்மையாகக் கண்டித்துப்பயமுறுத்தும் இவ் வேளையில் கம்யூனிஸ்ட் கட்சி வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தது ஆச்சரியமாகவுள்ளது. தொழிற்சங்க இயக்கத்திற்குத்துரோகம் செய்ய அவர்கள் முடிவுசெய்தது விந்தையாகவிருக்கிறது.

## தொழிற் சங்கமும் 'தடிபிடி' சில்வாவும்

அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சிக்குச் சென்று அரசாங்கத்தையும் நிதியமைச்சையும் கடுமையாகத் தாக்கிப் பேசிய டாக்டர். டபிள்யூ. டி (தடிபிடி) சில்வா இன்னும் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகவில்லையல்லவா? சுதந்திரக் கட்சியின் கீழுள்ள தொழிற் சங்கங்களிடையே அவருக்கு நிறையச் செல்வாக்கு இருப்பதால் கட்சிக்குள்ளுக்குள் இருந்தே அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்க்க அவர் முடிவு செய்திருக்கிருராம். கட்சியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டால்தொழிற் சங்கங்களும்சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். தொழிற் சங்கங்களின் எதிர்ப்பைப் பெற்றுள்ள இத்தக் கட்டத்தில் சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற் சங்கங்களின் ஆதரவையும் இழக்கக் கட்சித் தலைமைப் பீடம் விரும்பவில்லையாம். டாக்டர் சில்வா சுதந்திரக்கட்சியிலிருந்து இதுவரை விலத்தப் படாததற்கும் இதுதான் காரணம்.

## காதில் விழுந்தது

''நிதியமைச்சு எங்கே இருக்கிறது?''—ஒருவர் கேட்டார்.

''நண்பா! நிதியமைச்சல்ல; வரியமைச்சு!''—திருத்திஞர் இரண்டாமவர்.

## புதிய போட்டி

அரசாங்கம் புதிய போட்டியொன்றை நடத்த விருப்பதாக அறிகின்றேன். வரி விதிக்கக் கூடிய பொருள்களின் பெயர்களை எவர் தொகையாக எழுதியனுப்புகிருர்களோ அவர்கட்கு அரசாங்கம் ''நிதி சேமித்த பெம்மான்'' என்ற பட்டப் பெயரும் பொற்கிழியும் வழங்குமென்பது வதந்திதான்!

## ஏமாற்றும் சித்தாந்தம்

கம்யூனிஸ்ட் கட்சி புதிய வரிகளை கண்டிக்கிறதாம். ஆனுல் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிக்கின்றதாம். டாக்டர் டபிள்யூ டி. சில்வா கூறியதுபோல் ஒரு பெண்ணை முழுவதும்ஏற்க வேண்டும் அல்லது முழுவதும் நிராகரிக்கவேண்டும். வரவு-செலவுத்திட்டமென்றபெண்ணைக் கட்டித் தழுவிக்கொண்டு முகம் அழகாயில்லை அதுவேண்டாம் என்று சொல்ல முயலுகிருர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினர். இது எந்தச் சித்தாந்தம்?

—"அம்பலத்துறைவோன்"

சேலம்.

S. U R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்

வீரிய விர்த்தி மாத்திரை

மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமித போகத்தினுலும், தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக் குறைவு, நரம்பு தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும் வலுவைக் கொடுக்க வல்ல மிகச்சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரை புட்டி ரூ. 7-00

லேபனம் மெழுகு

குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகிய வைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்ஸ் புட்டி ரூ. 5-00

தேவைக்கு எழுதவும்:

கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்.

Prop: S. M. R. M. S.

நாகலை பஜார், ஆன்க்கருணை (சிலோன்) (P. O.)



ஒரு பேரழகி ஆற்றில் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தாள்

'களனி நதியின் இயற்கை வனப்பு மிக்க சூழலிலே பிறந்து சிட்டுக் குருவிபோலச் சிறகடித்துத் திரிந்த ரேசலின், வாழ்வின் திருப்பப் பாதைகளிலெல்லாம் நடைபோட்டுக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தது போல் பாதை முழுவதும் பூம்பாதையாக அமைந்திருக்கவில்லை ..' என்கிறார் இலங்கையின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான 'ஈழத்துச்சோமு'. ரேசலினை எங்கெல்லாம் அவர் இழுத்துச் செல்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கதையைத் தொடர்ந்து படியுங்கள் —

# களனி நதி தீரத்திலே...

"ஈழத்துச் சோமு" எழுதும்

சிறிய தொடர்கதை.

தந்தியைக் கண்டதும் புறப்பட்டுவிட்டேன்! கொழும்பிலிருந்து இரவு பூராவும் கண்விழித்து வந்த அலுப்பையும் பார்க்காமல் வீட்டைச் சேர்ந்ததும் சூட் கேசைச் சுழற்றி எறிந்துவிட்டு உடனே புறப்பட்டுவிட்டேன் ஆசுப்பத்திரிக்கு! 'குழந்தை பிறந்துவிட்டதுதானே. பதட்டப்படாமல் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுத்தான் போவன்' என்ற என் தாயின் வார்த்தைகள் கூட காதில் விழவில்லை.

எனது மோட்டார் வண்டி வல்லை வெளியைக் கிழித்துக்கொண்டு வேகமாகப் பறந்தது. என் உள்ளத்தில் ஒரே மகிழ்ச்சிப் பெருக்கு உவகை ஊற்றெடுத்துப் பிரவகித்துக்கொண்டிருந்தது. ஆவல் துடித்தது! ஆமாம் தந்தையாகிவிட்ட மிடுக்கு யாருக்குத்தான் இருக்காது? நானும் கமலாவும் நடத்திய இல்லறத்தின் விளைச்சல்—இன்பக்கடலில் குதித்தெழுந்து எடுத்த முத்து-எப்படியிருக்கும்? கமலா இளைத்துப்போயிருப்பாளா? பல்வேறு ஆவல்களும் மகிழ்ச்சியும் என்னை உயரே வானத்தில் பறப்பது போன்ற உணர்ச்சிக்கு இட்டுச் சென்றன!

பச்சை வண்ணச் சேலையை அணிந்து ஒயிலாகத் தோற்றமளித்து, மாலையில் எல்லாம் எங்கும் என்னுடன் கை கோத்தபடி மகிழ்வூட்டும் கமலா—நொடு நொடு என்று துடுக்காகப் பேசிப் பொய்க் கோபம் காட்டும் கமலா—இன்று தாயாகி விட்ட மகிழ்வில் பூரித்து என்னைக் கண்டவுடன் நாணித் தலையைக் குனிந்து கொள்ளப்போகிறாள்!

இணுவில் ஆசுப்பத்திரி வாசலில் என் காரை நிறுத்தினேன்.

அறையுட் சென்ற என்னை மாமி மகிழ்ச்சி முகம் காட்டி வரவேற்றார். வெள்ளையுடையணிந்த தாதி ஒருத்தி என்னைக் கண்டதும் அறையுள்ளிருந்து வெளியேறினாள். படுத்திருந்த கமலா என்னைக்கண்டுவிட்டு வெட்கப்பட்டு தலையைச் சாய்த்துக்கொண்டு ஒரக்கண்ணால்பார்த்தாள். நான் குழந்தையைப் பார்த்தபடியே இருந்தேன். கமலா என்னையும் குழந்தைய்யையும் மாறிமாறிப் பார்த்து தனக்குள் பூரித்துக்கொண்டது அவள் கன்னத்தில் தெரிந்தது! குழந்தை தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தது

மாமி எதுவோகாரணத்தை வைத்து வெளியே சென்றுவிட்டார். கதவின் திரையை இழுத்து விட்டு கமலாவின் படுக்கையில் அவளுக்கருகில் உட்கார்ந்தேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு மணவறையில் நாம் உட்கார்ந்தபோது ஏற்பட்ட வெட்கம் போல அவளுக்கு நாணமாக்கும்! அதற்கிடையில் பொய்க் கோபம் வேறு—தனக்கு அருகில் நேரத்தோடு நான் இருக்கவில்லை என்று!

அவள் கைகளை மெது வாய் பிடித்து முகத்தைத் திருப்பினேன். மிகவும் களைத்து மெலிந்துபோயிருந்தாள். "கமலா ....." நெற்றியில் புரண்டுகொண்டிருந்த கூந்தலைக்கோதி பின்புறமாக விட்டேன்' "கமலா வெகு கெட்டிக்காரி" என்று தட்டிக் கொடுத்தேன். அவள் முகத்தில் பெருமை படர்ந்த வெற்றிப் புன்னகை; தாய்மைப் புன்னகை.

வெளியே சென்றிருந்த மாமி கையில் இரண்டு ஒறேஞ்பார்லி போத்தல்களுடன் உள்ளே வந்தார். நான் எழுந்து கதிரையில் உட்கார்ந்தேன். கமலாவும் படுக்கையில் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

மாமி ஒறேஞ்பார்லியை உடைத்து எனக்கு முன்பு வைத்தார்.

"கடவுள் புண்ணியத்தாலை, கஷ்டம் எதுவும் இல்லாமல் பேறுகிவிட்டது"—மாமி சொன்னார்.

முகம் களைத்துப்போய் விட்டிருந்தாலும், மரதன் ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு பெற்றுவிட்ட விளையாட்டுக்காரனின் மகிழ்வைக் காட்டிலும் பலமடங்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் என் மனைவியின் முகத்தில் நிலவியது!

"இங்கே இருக்கிற டாக்குத்தரம்மாளும் நேர்சுகளும் மிச்சம் நல்லவை.கமலாவுக்கு கூட ஒரு நேர்சு நல்ல சினேகமாயிட்டா"



தட்டச்சு ப்பொறிகளில் அவள் கைகள் விளையாடியதும்........

மாமிதான் மீண்டும் சொன்னார்.

"இஞ்சாருங்கோ; ரேசாலின் என்று ஒருநேர்ஸ்; நல்லபிள்ளை. உங்களையெல்லாம் தெரியுமாம். அக்கறையோடு ஆதரவாக கவனிச்சது. கொழும்பு தானும் அவவின்றை ஊர்." கமலா நன்றியுணர்வு பொங்கக் கூறினாள்.

மிஸ் ரேசலின் இங்கு எப்படி வந்தாள்? கொழும்பிலிருப்பவள் எனக்குத் தெரிந்தவள்என்றால் 'அவளாகத்தான் இருக்குமோ? நாடகமே உலகம் அதில் நாமெல்லாம் நடிகர்கள்' என்ற ஷேக்ஸ்பியரின் வாக்கை யதார்த்தமாகவே செய்து காட்டுகிறாளா?

மிஸ் ரேசலின்! இந்த வாழ்க்கை மேடையில்எத்தனை பாத்திரங்களை ஏற்றுப் பார்த்து.விட்டாள்? உள்ளத்தில் வஞ்சனையற்ற அப்பாவிப்பெண் அவள் உலகத்தின் சூழ்ச்சித் தனமும், சூதாட்டத்தனமும் தெரியாத மான் குட்டி போலக் களனி ஆற்றங் கரையிலே அவள் வாழ்ந்ததும், டக் டக் டிக் ..டக் ......என தட்டச்சுப் பொறியில் அவள் கைகள் இலகு நடைபோட்டதும், இப்போ தாதியாக மாறிவிட்டதும்எத்தனைவிசித்திரம்.

* *

நானும் நடராசனும் சின்ன வயதிலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். அயல் வீட்டுக்காரர்கள். நடராசனின் தந்தை இளமையிலேயே இறந்துவிட்டதால் தாய்தான் அவனுக்கு எல்லாம். கிராமத்திலுள்ள ஓலைக் கூரைபோட்ட 'இந்துபோட்' பள்ளிக்கூடத்தில் வாண்டுப்பயல்களாக கொட்டமடித்தது வாத்தியாருடைய கதிரையில் ஊசி ஏற்றி வைத்தது, தாச்சி விளையாடியது முத

11-ம் பக்கம் பார்க்க

# சினிமா நடிகைகள் மணமானபின் நடிக்கக் கூடாது
# கணவனின் மனம் நோகும் என்கிருர் மாடி லட்சுமி

கட்டான உடலும் வெட்டான பார்வையும் உள்ள கட்டழகி குமாரி மாடிலட்சுமி. தென்னகத் திரைவானில் நடனமணியாகத் திகழ்ந்தவர்-திகழ்பவர் மாடிலட்சுமி. நாட்டுப்பற்றும்மொழியுணர்ச்சியும் கொண்டவர். நடனக்கலையின் பெருமை நாடெங்கும் பரவவேண்டும் என்றநல் லெண்ணம் கொண்டவர்.

இவரைத்தான் நான் அண்மையில் சந்திக்கச் சென்றேன். மாடிப் படிகளைக் கடந்தேன். எதிரே இருகை கூப்பி 'வணக்கம்' என்று வரவேற்ருர். நான் பதிலுக்கு வணக்கம் செலுத்தினேன்.

பேட்டி ஆரம்பமானது. அவர் எனக்கெதிரே, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பதில் சொல்ல தயாராக இருந்தார்.

**கேள்வி:** நீங்கள் பிறந்த ஊர் எது?

**பதில்:** வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பாடியில் பிறந்தேன். வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான்.

கே: நீங்கள் எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறீர்கள்?

ப: அபூர்வ சகோதரிகள், விஜயகுமாரி, சியாமளா, முதல்தேதி, ஜெயகோபி, மாமியார், சுகம்எங்கே, காவேரி, மதுரைவீரன், நல்லஇடத்துச்சம்பந்தம், சகோதரி ஆகிய படங்ளில் நடித்திருக்கிறேன்.

கே: இப்போது எந்தெந்தப் படங்களில்நடிக்கிறீர்கள்?

ப: நடிப்பது விக்கிரமாதித்தன், அணையாவிளக்கு, நந்தனர் என்ற படத்தில் நடிக்க இருக்கிறேன்.

கே: நீங்கள் யார்மூலமாகப் படஉலகில் புகுந்தீர்கள்?

ப, ஜெமினி கணேசன் மூலமாகப் படவுலகில் சென்றேன். அப்போது அவர் ஜெமினியில் வேலைபார்த்துக்கொண்டிருந்தார்.

கே: நீங்கள் நாடகத்தில் ஏன் நடிப்பதில்லை?


ப: நடனம் ஆடுவதற்கே நேரம் செலவாகிவிடுகிறது. நாடகத்தில் நடிக்க நேரமே இல்லை. இருந்தாலும்ஒரு நாடகத்தில்நான் நடிக்க இருக்கிறேன்.

கே: நீங்கள் நடனக் குழு வைத்திருக்கிறீர்களா?

ப: ஆமாம்.

கே: உங்களுடைய எதிர்கால ஆசை என்ன?

ப: எதிர்காலத்தில் ஒரு நல்ல நடிகையாகத் திகழவேண்டும். ரசிகர்கள் மத்தியில் மேல் நாடுகளில் நடனம் ஆடவேண்டும், நடிப்புத் துறையில் நான் முன்னேறவேண்டும்என்பதேஎனதுஎதிர்காலஆசை.



நடிகை மாடிலட்சுமியின் ஒய்யாரத்தோற்றம்

கே: உங்களுக்குப்பிடித்தநடிகர், நடிகைகள் யார்?

ப: ரசிகர்களுக்குப் பிடித்தமான எல்லா நடிக, நடிகைகளையும் எனக்குப் பிடிக்கும். ஏனென்ருல் நானும் ஒரு ரசிகைதானே?

கே: உங்களுக்குப் பிடித்தமான அரசியல் தலைவர் யார்?

ப: பண்டிதர் நேரு, அறிஞர் அண்ணு.

கே: உங்கள் தங்கை குமாரி சச்சு எந்தெந்தப் படங்களில் நடிக்கிருர்?

ப: கலையரசி, சின்னப் பண்ணைச்செல்வம், ஏ. வி. எம். புரடக்ஷன்சில் இரண்டு படங்களில் நடிக்கிருர்.

கே: உங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவம் என்ன?

ப: எனது பாட்டி ரங்கூனில் இருந்தார். அப்போது நான் சின்னப் பெண். அவருடன் நான் ரங்கூனில் இருக்கும்போது ஒருநாள் காணுமல் போய்விட்டேன். என் பாட்டியும் பெற்ருேரும் பதறினர்கள். அன்று நான் காணுமல் போய்விட்டேனுல் இப்போது நடிகையாக வந்திருக்க முடியுமா? அந்தநாள் சம்பவம் இந்த நாள்வரை என் மனத்தில் பதிந்துவிட்டது.

கே: நடிகைகள் திருமணம் செய்துகொள்வது பற்றித் தங்கள்கருத்தென்ன?

ப: நடிகைகள் நடிப்புத்துறையில் முன்னேறி மக்கள்மத்தியில் நல்லபுகழ் பெற்றபிறகு. பத்மினியைப் போல, லலிதாவைப் போலதிருமணம் செய்து கொள்ளலாம். மணமான பின் நடிக்காமலிருப்பதே நல்லது. ஏனெனில் மணமாகி இன்னொருவருடன் கதாநாயகியாக நடிக்கும்போது, தன்கணவர் அதைப் பார்க்க மனம் புண்படும் அல்லவா? நான் தனிஆள்! எப்படி வேண்டுமானுலும் உடை உடுத்தலாம், நடிக்கலாம் கேட்க ஆள் கிடையாது. ஆனுல் மணமாகி விட்டால் கண்டிக்க கணவன் இருக்கிருரே!

கே: நடிகர்களுக்குக் கட்சி தேவையா?

ப: அது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. சிவாஜி கட்சியில் சேராமல் மக்களுக்குச் சேவைசெய்கிருர். எம்.ஜி. ஆரும் கட்சியில் சேர்ந்து மக்களுக்குச் சேவை செய்கிருர். ஆகநடிகர்கள் மக்களுக்குச் சேவை செய்கிருர்கள்—கட்சியில் இருந்தாலும்இல்லாவிட்டாலும்!

கே: இலங்கை ரசிகர்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: இலங்கையிலுள்ள ரசிகர்கள் கலைக்கு நல்லமதிப்பு தருகிருர்கள், தென்னிந்தியாவில் மதுரை ரசிகர்கள் கலைக்கு மதிப்பு தருகிருர்கள். அதுபோல இலங்கை ரசிகர்கள் கலை அன்பர்கள். அவர்களை என்னுல் மறக்கமுடியாது.

கே: இலங்கைக்குப்போக உங்களுக்கு விருப்பமா?

ப: இலங்கைக்குப் போக நானும் எனது சகோதரியும் நடித்துக்கொண்டிருக்கிருேம்.

கே: 'புதினம்' வாசகர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ப: 'புதினம்' பலசுவையான, புதுமையான செய்திகளைத் தாங்கிவருகிறது. பத்திரிகை வளர வாசகர்கள்தான் முக்கியம். நல்ல பல பகுதிகளைக் கொண்ட புதினத்தை நான்தொடர்ந்துபடிக்கவிரும்புகிறேன்.

—பி. வி. கிரி



★

"ஆகா, அபாரம்" என்று பாராட்டினர் நமது கலாச்சாரமந்திரி, குமாரி சாந்தி இரத்தின சபாபதியின் நடனத்தைப் பார்த்துவிட்டு. கொட்டாஞ்சேனை நல்லாயன் பாடசாலையில் கல்வி பயிலும் இவருக்குப் பத்து வயதுதானுகிறது. திரு. சுகுமாரன் நாயரிடம் கதகளியும், ஸ்ரீ மகா தேவபிள்ளையிடம் பரத நாட்டியமும் முறையாக்ப் பயின்று வரும் இச்சிறுமி தமது பால்யப் பருவத்திலேயே பல மேடைகளில் தோன்றி அபாரமாக நடனமாடிவருகிருர்.

★

## நடிகரிடம் அகப்பட்டுத்திண்டாடும் படப்பிடிப்பாளர்

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களை பிரபல நடிகர் ஒருவர் படுத்தும் பாடு பெரும்பாடாக இருக்கிறதென்று படவுலக வட்டாரத்தில் பெரும் பேச்சடிபடுகிறதாம். தாம் சொல்கிறபடியே தயாரிப்பாளர்கள் நடந்துகொள்ளவேண்டுமென்பது தான் அவரது 'சுபாவமாம்'! இந்த நடிகரின் 'தொல்லைக்கு உள்ளானவர்கள்பலர். இப்பொழுது மற்றுமொரு படாதிபதி மாட்டிக்கொண்டு 'தத்தளித்துக்' கொண்டிருக்கிருராம். இந்தப் படாதிபதி முதலில் ஒரு படத்தைத் தயாரித்தார். 'தலை குப்புற' விழுந்தார். பட்ட மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்து மீண்டும் ஒரு படத்தைத் தயாரிக்க எண்ணினர். பிரபல நடிகரைப் போட்டு எடுத்தால் நன்ருக ஓடுமென்று எண்ணியோ என்னவோ பிரபல நடிகர் ஒருவரையும் ஒப்பந்தம் செய்தார். படப்பிடிப்பு ஆரம்பித்து முதல் காட்சியும் சுடப்பட்டது. ஆரம்பித்ததே நாடகம்! அந்த நடிகர் தமது வழக்கமான 'திருவிளையாடலை' ஆரம்பித்து விட்டாராம். அதாவது அதன் டைரக்டரை, வசன கர்த்தாவை மாற்றிவிட வேண்டுமென்று கட்டளை போட்டதோடு மட்டும் நின்றுவிடாமல் அப்படிச் செய்தால்தான் தம்மால் தொடர்ந்து நடிக்க முடியும் என்றும் ஒரு 'போடு போட்டு' விட்டாராம்.

# இலங்கை எங்கே செல்கிறது?

## இலங்கை எங்கே செல்கிறது?

கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை அரசாங்கத்தை நடத்திச் செல்லவில்லை என்பதும், கூடிய விரைவில் அப்படி அரசாங்கத்தைக் கைப்பற்றக் கூடிய அளவுக்கு அந்தக் கட்சி வளர்ச்சி அடைய மாட்டாது என்பதும் நமக்கெல்லாம் தெரிந்த சங்கதிதான்.

ஆனால், "இலங்கையில் நடைபெற்று வரும் மாற்றங்கள் இந்த நாட்டையும் கம்யூனிச நாடுகளைப் போலவே மாற்றி வருகின்றதா, இல்லையா?" என்று கேட்டால்பதில்சொல்வது சற்றுச் சிரமமான காரியமாகத்தான் இருக்கும்.

### கல்வித்துறைச் சிக்கல்.

இலங்கையின் தொல்லைகள் பற்றியும், இந்தத் தொல்லைகள் நம்மை எங்கே இட்டுச் செல்கின்றன என்பது பற்றியும் ஆராய நமது நாட்டின் கல்வித்துறையை மட்டுமே எடுத்துக் கொள்வது போதுமானது. பிரதமரோ, மந்திரிகளோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ நமது பிள்ளைகளின்கல்வி எந்தநிலையில் இருக்கிறது என்பது பற்றிக்கவலைப்படுவதாகக் காணோம். 'இன்றைய குழந்தைகள் நாளைய குடிமக்கள்' என்ற சாதாரண உண்மையைக்கூட நமது மந்திரிகள் மறந்து விடுகிறார்கள். மந்திரிகள் மாற மாற கல்வித்திட்டங்களும் மாறுகின்றன. மந்திரியினது திட்டங்கள் பரிசோதிக்கப்படும் பரிசோதனைச் சாலையாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவே தவிர கல்வி புகட்டும் நிலையங்களாக அவை இல்லை.

போதிய வாங்கு மேசைகள் இல்லாமை, விஞ்ஞானகூடங்கள் இல்லாமை, இருக்கின்ற விஞ்ஞான கூடங்களில் போதிய உபகரணங்கள் இல்லாமை, திடீர் திடீரென மாற்றப்படும் ஆசிரியர்கள், வாரத்திற்கொருமுறை மாற்றப்படும் பாடத்திட்டங்கள், மாதத்திற்கொருமுறை மாற்றப்படும் சட்டதிட்டங்கள் ஆகிய இவையெல்லாம் சேர்ந்து பிள்ளைகளின் கல்விக்குச் சவால் விடுக்கும் பயங்கரப் பேய்களாகவே இருக்கின்றன. இந்த நிலைமை தொடர்த்து நீடித்தால் நமது பிள்ளைகளின் கதி என்ன......?

கம்யூனிஸ்ட் நாடுகளில் மட்டுந்தான் ஒருகுறிப்பிட்ட கோணத்தில் மட்டும் நின்று சிந்திக்க வேண்டும் என்ற தோரணையில் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கப் பட்டு வருவது வழக்கம்.

ஜனநாயக நாடுகளிலெல்லாம் கல்வி என்பது தனியார் கையிலும், ஸ்தாபனங்களிடத்திலும் ஒப்படைக்கப் பட்டு இருக்கின்றது. ஒரு கோணத்தில் நின்று சிந்திக்கும் போது பிழையான முடிவு கிடைத்த போதிலுங்கூட அந்தக் கோணத்தில் நின்று சிந்திக்கும் உரிமை பிள்ளைகளுக்கு இருக்கவேண்டும்; சிந்தனைச் சுதந்திரம் இருக்கவேண்டும். அது தான் ஜனநாயகத்தின் சிறப்பான அம்சமாகும்.

## உங்கள் ஊர் வழியாக ரயில் செல்லவேண்டுமானால்...

'உங்கள் ஊர் வழியாக ரயில் செல்லவேண்டுமென நீங்கள் விரும்பினால் என்ன செய்வீர்கள்?' ரயில்வே மந்திரிக்கோ அல்லது ரயில்வே ஜெனரல் மனேச்சருக்கோ ஒரு விண்ணப்பம் எழுதி அனுப்புவீர்கள். அந்த விண்ணப்பம் நுணுக்கமாக பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் உங்கள் ஊர் வழியாக ரயில் செல்வதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால் உங்கள் விண்ணப்பம் ஏற்கப்படும்.

உங்கள் ஊர் வழியாக ரயிலும். செல்லும் ஞாபகத்தில் வைத்திருங்கள்! உங்கள் வேலை விண்ணப்பம் எழுதி வேண்டுகோள் விடுப்பதோடு முடிந்தது! உங்கள் ஊர்வழியாக ரயிலை ஓட்டிச் செல்பவர் எஞ்சின் டிரைவர்தான்!

மந்திரிகள்வேலையும் இப்படிப்பட்டதுதான்! அவர்கள் கொள்கை வகுப்பதோடு நின்றுவிடவேண்டும்-நீங்கள் வேண்டுகோள் விண்ணப்பம் அனுப்பியது போல! நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் அந்தக் கொள்கையைச் செயல் முறையில் கொண்டு நடத்துவதற்கான காரியங்களைக் கவனிப்பார்கள்.

உங்கள் ஊர் வழியாக ரயில் செல்லவேண்டுமென்பதற்காக நீங்கள் ஓடிச் சென்று எஞ்சின் டிரைவர் ஸ்தானத்தில் அமர முயற்சிப்பது எவ்வளவு முட்டாள்தனமோ அவ்வளவு முட்டாள் தனந்தான் நிர்வாகத்தில் மந்திரிகள் தலையிடுவதும்!

பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டதோடு, இப்பொழுதுதல்லா விடின் இன்னும் சிறிது நாட்கள் கழித்தாவது, பிள்ளைகளின் சிந்தனைச் சுதந்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு விடும் என்று எதிர்பார்ப்பது தவறாகுமா? கம்யூனிசத்தை நோக்கி நாம் காலடி எடுத்து வைப்பதன் முதற்படி பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டதுதான் என்று சொல்வது பிழையாகுமா?

### நிர்வாகத்தில் மந்திரிகள் தலையீடு:

நிர்வாகத்தில் மந்திரிகள் தலையிடுவதனால் ஏற்படும் நாசத்தைப்பற்றி எழுத இங்கு இடம்போதாது. மந்திரிகள் கொள்கை வகுப்பதோடு நின்றுவிடவேண்டுமே தவிர நிர்வாகத்தில் தலையிடக்கூடாது. ஜனநாயகம் நல்ல முறையில் நடைபெற இது மிகவும் அவசியம். பொறுப்பற்ற ஆட்சிக்கும், சர்வாதிகார ஆட்சிக்கும் முதற்படிதான் நிர்வாகத்தில் மந்திரிகளது தலையீடு. இலங்கையைப் பொறுத்த அளவில் நிர்வாகத்தில் தலையிடாத மந்திரிமார் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

### லஞ்ச ஊழல்:

அரசாங்க மந்திரிகளையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ மட்டும் குறைகூறிப் பயனில்லை. சாதாரண பொதுமக்கள்கூட மிகவும் பொறுப்பற்றவர்களாகத்தான் நம்முடைய நாட்டில் இருக்கின்றார்கள். அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் தங்களை பெரிய துரைகளாகவே நினைத்துக்கொள்கிறார்கள். வீண் அரட்டை அடிப்பதும், ஆமை வேகத்தில் வேலை செய்வதும், அலுவலகத்துக்கு வரும் பொது மக்களை நிற்கவைப்பதும், மரியாதைக் குறைவாக நடத்துவதும் நமது அரசாங்க ஊழியர்களின் சிறப்பான அம்சங்களாகும். பொது மக்களும் நம்பிக்கை குறைந்தவர்களாகும், நேர்மையான வழியில் சென்றால் ஒன்றும் சாதிக்க முடியாது என்று நினைப்பவர்களாகவும், யாராவது பெருங்கையைப் பிடித்தால்தான் ஏதாவது செய்யலாம் என்று நினைப்பவர்களாகவும் உள்ளார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து சாதாரண சங்கக்கடை நிர்வாக சபையினர் வரைக்கும் லஞ்சம் பெற்றுக்கொள்ளும் அற்புதத்தை இந்த நாட்டில்மட்டுமேதான் காணலாம். லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் வெகு இயற்கையான தொழில்கள் ஆகிவிட்டன. முன்னர் தெரிவு செய்து அனுப்பிய பாராளுமன்றப் பிரதிநிதிகள் லஞ்சக் குற்றவாளிகள் என்பது லஞ்சக் கமிஷனால் கண்டுபிடித்துச் சொல்லப்பட்ட பின்னருங்கூட அவர்களையே மறுபடியும்பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யக்கூடிய அளவுக்கு நமது மக்கள் இருக்கின்றார்கள்.

"லஞ்சக்குற்றவாளிஒருவருக்கு வாக்களித்தவரை நோக்கி "எதற்காக மறுபடியும் அவருக்கு வாக்களித்தீர்கள்?" என்று கேட்டதற்கு "அவர் லஞ்சம் வாங்குவார் என்பது எங்களுக்குத் தெரியும். மற்றவர்களைக் காட்டிலும் குறைவாகவே அவர் வாங்குவார். ஏதோ நாங்கள் கொடுத்ததை அவர் வாங்கிக்கொள்ளுவார். அவர் பாராளுமன்றத்தில் இருந்தால்தான் நல்லது. அப்பொழுதுதான் ஏதாவது காரியம்பார்க்க முடியும்" என்ற பதில் கிடைத்தென்றால் நாட்டின் நிலைமையை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்!

### தேசியமயப் பூச்சாண்டி

சொந்தமாகத் தொழில் செய்து இலங்கையின் வளத்துக்கு வழிகோலுபவர்கள் எந்த நாளும் பயத்துடனேயே வாழவேண்டிய சூழ்நிலை இன்று இருக்கிறது. அறிந்தோ அறியாமலோ நாட்டிலுள்ள அரசியல் தலைவர்கள் பலர் நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, தொழில்களையும், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தையும், வங்கிகளையும், தோட்டங்களையும் தேசியமயமாக்குவதுதான் வழி என்று கூப்பாடு போடத் தொடங்கியுள்ளனர். அரசாங்கமும் சில விஷயங்களில் திடீர் திடீரெனத் தலையிடத் தொடங்குகின்றது. தனியார் துறையை முற்றாக அழித்து ஒழித்து நாட்டின் பொருளாதாரத்தை நாசம் செய்வதற்கு இந்தத் தேசியமயப் பூச்சாண்டி ஒன்றே, போதும்.

### பொருளாதார நெருக்கடி

தேசியமயமாக்கப்பட்ட விஷயங்களில் ஏற்பட்டுள்ள பெருத்த நஷ்டங்களும் செலவுகளும், அரசாங்கத்தின் கொள்கைச்சிக்கல்களின் பிரதிபலிப்பால் தனியார்துறை முயற்சிகளில் விளைந்த தேக்கமும், அரசினர் நிர்வாகத்தில் நிகழ்ந்த அனாவசிய ஊதாரிச் செலவுகளும், மந்திரிகளது வெளிநாட்டுஉல்லாசப் பிரயாணங்களும்பயங்கரமானதொரு பொருளாதார நெருக்கடியை நாட்டில் உருவாக்கி உள்ளன.

அரசாங்கத்தினர் முன்யோசனையின்றி தங்களது தேவை கருதி அச்சடித்த காகித நோட்டுக்களின்காரணமாக நாட்டில் பயங்கரமான முறையில் பணவீக்கம் ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசிகள் உயர்வதற்கு உண்மையானகாரணம் இதுதான்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முட்டாள்தனமான ஒரு பட்ஜெட்டை நிதிமந்திரி தயாரித்திருக்கிறார். பொதுமக்கள்மீது எக்கச்சக்கமான வரிகள் விதிக்கப்பட்டுள்ளன, பல பொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் பொதுமக்களைப் பொறுத்த அளவில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நிகழ்ச்சியாகவே உள்ளன.

### பறிபோகும் சுதந்திரம்

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் அற்ப காரணங்களுக்காக திடீர் திடீரென வேறு வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றார்கள். சில சமயங்களில் விசாரணை எதுவுமின்றி வேலை நீக்கமும் செய்யப்பட்டு விடுகின்றார்கள். சொந்தமாகத் தொழில்

## சின்னத்துரையின் சிதம்பர தரிசனம்

சின்னத்துரை ஒரு சிறிய பலசரக்குக் கடையின் முதலாளி. அன்றாடச் சீவியத்துக்குத் தளப்பம் இல்லாத வகையில் அவருடைய வருமானம் உண்டு. அவருக்கு வயது அவ்வளவு ஆகவில்லை; முப்பத்திரண்டு இருக்கும்: பிள்ளை குட்டி கிடையாது. அவருடைய சொற்ப வருமானத்திலும் ஏதோ வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி சிறிது மிச்சம் பிடித்துக் கொண்டு அவர் தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு ஆண்டுக்கொரு முறை தென் இந்தியாவிலுள்ள கோயில்களைத் தரிசிக்கத் தவறுவது கிடையாது. ஆண்டவன் மனமிரங்கி, தன்னுடைய சந்ததி விளங்கும்படியாக, ஒரு 'புத்திர பாக்கியம்' கிடைக்க வேண்டும் என்பது தான் அவருடைய பிரார்த்தனை. இந்த முறையும் மார்கழி மாதத்தில் சிதம்பரம் சென்று தில்லையில் ஆடும் பெருமானைத் தரிசிக்கும் உத்தேசம் அவருக்கு உண்டு. ஆனால் பாவம்–

இலங்கை அரசாங்கத்தின் புதிய பாஸ்போட், எக்சேஞ் விதிகள் அவரை இந்தியா செல்ல அனுமதிக்குமா என்பது தெரியவில்லை!

**தன்னுடைய இஷ்டத்துக்கு தான் சம்பாதித்த- கஷ்டப்பட்டு மிச்சம் பிடித்த- பணத்தைச் செழவழிக்க முடியாவிட்டால் அவர் எதற்காக உழைக்க வேண்டும்? மிச்சம் பிடிக்க வேண்டும்?**

# ...ல்கிறது?

. அறிந்தோ அறியா
ா நாட்டிலுள்ள அர
தலைவர்கள் பலர்
டின் பொருளாதார
க்கடியைத் தீர்ப்ப
, தொழில்களை
ற்றுமதி இறக்குமதி
தகத்தையும், வங்கி
ம், தோட்டங்களை
தேசியமயமாக்குவது
வழி என்று கூப்பாடு
-த் தொடங்கியுள்ள

தார நெருக்கடியை நாட்டில் உருவாக்கி உள்ளன.

அரசாங்கத்தினர் முன் யோசனையின்றி தங்களது தேவை கருதி அச்சடித்த காகித நோட்டுக்களின்காரணமாக நாட்டில் பயங்கரமான முறையில் பணவீக்கம் ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசிகள் உயர்வதற்கு உண்மையான காரணம் இதுதான்.

அரசாங்கமும் சில
ங்களில் திடீர் திடீ
த் தலையிடத் தொ
கின்றது. தனியார்
யை முற்றாக அழித்
த்து நாட்டின் பொ
ாரத்தை நாசம்
தற்கு இந்தத் தே
ப் பூச்சாண்டி ஒன்
ாதும்.

### ...ளாதார நெருக்கடி

சியமயமாக்கப்பட்
ங்களில் ஏற்பட்
பெருத்த நஷ்டங்க
செலவுகளும், அரசா
ின் கொள்கைச்சிக்
ின் பிரதிபலிப்பால்
ார்துறை முயற்சிக
ிளைந்த தேக்கமும்,
ர் நிர்வாகத்தில்
த அனுவசிய ஊதா
லவுகளும், மந்திரி
வெளிநாட்டுஉல்லா
ரயாணங்களும்பயங்
னதொரு பொருளா

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முட்டாள்தனமான ஒரு பட்ஜெட்டை நிதிமந்திரி தயாரித்திருக்கிறார். பொதுமக்கள்மீது எக்கச்சக்கமான வரிகள் விதிக்கப்பட்டுள்ளன, பல பொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் பொதுமக்களைப் பொறுத்த அளவில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நிகழ்ச்சியாகவே உள்ளன.

### பறிபோகும் சுதந்திரம்

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் அற்ப காரணங்களுக்காக திடீர் திடீரென வேறு வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றார்கள். சில சமயங்களில் விசாரணை எதுவுமின்றி வேலை நீக்கமும் செய்யப்பட்டு விடுகின்றார்கள். சொந்தமாகத் தொழில் செய்து நாட்டின் வளத்துக்கு வழி வகுப்பவர்களுக்குள்ள வரி, லைசென்ஸ் தொல்லைகள் பற்றி இங்கு எழுத முடியாது. யாராவது வெளிநாடு செல்ல விரும்பினல் அவர்களுக்குள்ள பாஸ்போட்,எக்சேஞ் அநியாயங்கள் கணக்கில் அடங்காதவை.

இப்படியாக சாதாரணப் பொதுமக்கள் அனைவருமே அரசாங்கத்துக்கும் நிர்வாக யந்திரத்துக்கும் அடிமையாக்கப்பட்டுள்ளார்கள்.

''ஒருவன் தான் உழைத்த பணத்தைத் தனது இஷ்டத்துக்குச் செலவிட முடியாவிடில்வங்கியில்இருக்கும் அவனது பணம் ஒரு பயனற்றபண்டமேயாகும்" என்று அண்மையில் ஒரு பத்திரிகையில் திரு.கே.சி. நடராசா அவர்கள் எழுதியதை இந்தக் கட்டத்தில் நினைவுபடுத்திக்கொள்வது நல்லது.

"ஒருவன் தனது இஷ்டத்துக்கு தான் உழைத்த பணத்தைச் செலவிட முடியாவிட்டால் எதற்காக அந்தப் பணத்தை உழைக்க வேண்டும்?" — வெளிநாடு செல்ல விரும்பும் ஒருவனுக்கு இலங்கை அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகளைப் பார்க்கும் போது எந்த மனிதனும் மேற்கண்ட கேள்விகளைக்கேட்காமலே இருக்கமாட்டான்.

### இப்படியே போனல் என்ன நடக்கும்?

நாட்டிலுள்ள கல்வித் துறைச் சிக்கலையும், நிர்வாகத்தில் மந்திரிகளது தலையீட்டையும், லஞ்ச ஊழலையும் பார்க்கும்போது நாடுஅழிவை நோக்கித் தான் படுவேகமாக முன்னேறிச் செல்கின்றது எனச் சொல்லத் தோன்றுகிறது,

தேசியமயப் பூச்சாண்டியும், பொருளாதார நெருக்கடியும், சிறுகச் சிறுகச் செய்யப்படும் கட்டுப்பாட்டுச் சட்டங்களும் பொது மக்களை அடிமைகளாக்கவே உதவுகின்றன. சுதந்திரத்தை விரும்புகின்ற மக்கள் நிர்வாகத்துக்கு அடிமையாவதையுங்கூட வெறுக்கவே செய்வார்கள்.

நோக்கங்களும், கொள்கைகளும் மனிதனுக்காக ஏற்பட்டவையே என்பதையும், நோக்கங்களுக்காகவும் கொள்கைகளுக்காகவும்-இன்னும் சொல்லப் போனல் அதிகாரத்திலிருப்பவர்களது சொற்பகால படாடோப வாழ்வுக்காகவும்-மனிதனை வதைப்பது முட்டாள்தனம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

— "சுகுமாரன்"

---

## சின்னத்துரையின் சிதம்பர தரிசனம்

சின்னத்துரை ஒரு சிறிய பலசரக்குக் கடை
ன் முதலாளி. அன்றாடச் சீவியத்துக்குத் தள
ம் இல்லாத வகையில் அவருடைய வருமா
ம் உண்டு. அவருக்கு வயது அவ்வளவு ஆகவி
ல; முப்பத்திரண்டு இருக்கும்: பிள்ளை குட்டி
டையாது. அவருடைய சொற்ப வருமானத்தி
ம் ஏதோ வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி
ிது மிச்சம் பிடித்துக் கொண்டு அவர் தனது
னவியையும் அழைத்துக் கொண்டு ஆண்டுக்
ாரு முறை தென் இந்தியாவிலுள்ள கோயில்
ளத் தரிசிக்கத் தவறுவது கிடையாது. ஆண்
வன் மனமிரங்கி, தன்னுடைய சந்ததி விளங்
ம்படியாக, ஒரு 'புத்திர பாக்கியம்' கிடைக்க
ண்டும் என்பது தான் அவருடைய பிரார்த்
ன. இந்த முறையும் மார்கழி மாதத்தில்
ம்பரம் சென்று தில்லையில் ஆடும் பெருமா
த் தரிசிக்கும் உத்தேசம் அவருக்கு உண்டு.
னல் பாவம்—

இலங்கை அரசாங்கத்தின் புதிய பாஸ்
பாட், எக்சேஞ் விதிகள் அவரை இந்தியா
ல்ல அனுமதிக்குமா என்பது தெரியவில்லை!

தன்னுடைய இஷ்டத்துக்கு தான் சம்பாதித்த- கஷ்
பட்டு மிச்சம் பிடித்த- பணத்தைச் செழவழிக்க
யாவிட்டால் அவர் எதற்காக உழைக்க வேண்டும்?
சம் பிடிக்க வேண்டும்?

---

# கண்டதும்... கேட்டதும்...

## கீரிமலை க்ஷேத்திரத்தின் பெருமை.

எடிட்டர் என்னைக் கூப்பிட்டு, "நாளைக்கு ஆடி அமாவாசையல்லவா! இன்றிரவு கீரிமலை வலு கலாதியாயிருக்கும். போய்ப் பார்த்துக் கொண்டு வந்து பேப்பருக்கு ஏதாவது எழுதுமேன்!'' என்றார்.

எடிட்டருக்கு முனனாலிருந்தால் எனக்கு எழுதவே வராது. ஆகவே எடிட்டர் கீரிமலைக்குப் போகச் சொன்னதும் கிடைத்தசந்தர்ப்பத்தை நழுவவிடாது கிளம்பினேன்.இரவோடிரவாக ஜனங்கள் நாலாபக்கங்களிலுமிருந்து கார்களிலும் பஸ்களிலும் வந்து கீரிமலையில் குவிந்திருந்தார்கள். கீரிமலையில் புண்ணியவான்கள் கட்டிவைத்த மடங்கள்பலஇருக்கின்றன. எனினும் இக்காலத்தவர்கள் அந்தமடத்தைக் கட்டிய மகான்கள் புண்ணியத்தை சம்பாதித்துக்கொள்ளக்கூடாதென்றெண்ணியோ என்னவோ அந்த மடங்களை மறந்துபோய்க் கூட எட்டிப்பார்ப்பதில்லை.

கீரிமலைச் க்ஷேத்திரம் ஒரு பாடல் பெற்றதலம், கீரிமலைத் தீர்த்தம் மகாபுனிதமானது. கீரிமலையில் இருக்கும் ஆலயங்கள் புராதனமானவை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகோடியில் இருக்கும் இப்புகழ் பெற்ற தீர்த்தம், மூர்த்தி இரண்டும் இன்று சைவப்பெருமக்களால் அலட்சியம் செய்யப்படுகிறனவென்றே சொல்ல வேண்டும். சைவப் பெருமக்களுக்கு கீரிமலை க்ஷேத்திரத்திலாவது தீர்த்தத்திலாவது அபிமானமிருக்குமாயின்அங்குவந்து அம்மையப்பனைவழிபட்டு புண்ணியதீர்த்தமாடிச் செல்லும் பக்தகோடிகள் தங்கி இளைப்பாறித் தாகசாந்தி செய்வதற்கென்று நம் முன்னோர்களால் பெருஞ்செலவில்நிர்மாணிக்கப்பட்ட மடாலயங்கள் இன்று வெளவால்களின் வசிப்பிடங்களாகப் பயன்படுமா? சிறுப்பர் மடம் தவிர்ந்த ஏனையமடங்கள் நல்லபராமரிப்பின்றி பாழ்மனைகளாகிக் கொண்டிருக்கின்றன. சிறுப்பர்மடம் செவ்வனே நடைபெறுகின்றது. ஆடி அமாவாசைத் தீர்த்தத்துக்கு முதல் இர்வு முழுவதும்இம் மடத்தில் சங்கீதக் கச்சேரி, மேளக் கச்சேரி, கதாப்பிரசங்கம், பஜனை முதலியனநடை பெற்றவண்ணமிருந்தன. மடத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருந்திரளான மக்கள் கூடிச் சிரமபரிகாரம் செய்து கொண்டனர்.

### வடக்கும் தெற்கும் ஒன்றாகிவிடாதா?

ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவத்தின்போது மாத்திரம் ஏனையமடங்களும் மடங்களாக இருக்கின்றன. வெட்டவெளிகளில் கடைகள் தோன்றிவிடுகின்றன. ஒருநாளைப் பிழைப்புக்காக விதம் விதமான சாமான்களெல்லாம் கீரிமலையில் வந்து குவிந்துவிடுகின்றன. தீர்த்தம் முடிந்துசுவாமி கோயிலுக்குத் திரும்பியதும் ஒரு கடையையும் காணமுடியாது.

கீரிமலையில் புதிதாகக் குடியேறிய ஒருவர் ஆடி அமாவாசைக்கு இரண்டுதினங்களுக்கு முன்னர் பளைக்குப்போய்விட்டு அமாவாசையன்றுகீரிமலைக்குத் திரும்பிவந்து சேர்ந்து தனது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியாது திண்டாடினாராம், இது ஒரு விகடத்துணுக்கேயாயினும் உண்மையில்லாமலில்லை. எடிட்டர் சொன்னமாதிரி ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலை "வலு கலாதி'' யாகத்தான் இருக்கும். லோங்பீச், மியாமிபீச் எல்லாம் கீரிமலை பீச்சின் கால்தூசி கூடப்பெறுதெனலாம். ஆனல் ஒன்று அந்த பீச்சுகளில் அரை நிர்வாண அழகுராணிகள் மலிந்து காணப்படுவர். கீரிமலைபீச்சில் அழகிகளை, ஏன் இளம் பெண்களைக்காண்பதே அபூர்வம். யாழ்ப்பாணத்துநாகரீகம் இன்னும் அந்த அளவுக்கு முன்னேற்றமடையாதது குறித்து நாம் சந்தோஷப்படத்தான் வேண்டும். கொழும்பில்நடைபெறும் வெசாக்விழாவுக்கும் கீரிமலையில் நடைபெறும் ஆடி அமாவாசைத்தீர்த்தத்துக்கும் இந்தவித்தியாசமாவது இல்லாதிருந்தால் அப்புறம் வடக்கும் தெற்கும் ஒன்றாகிவிடாதா?

### "பிரைஸ் கொன்ரோல்" லட்சணம்

அடுத்தவீட்டு அம்பலவாணர் வழக்கத்துக்கு மாறாக கையில் ஒரு தராசுடன் கோப்பிக் கடைக்குள் நுழைந்தால் யாருக்குத்தான் ஆச்சரியமாயிராது?

"மிஸ்டர் அம்பலவாணர்! கொஞ்சம் இப்படி வாருங்கள். உங்களோடு ஒரு அலுவல் கதைக்கவேணும்" என்றேன். கோப்பிக் கடைக்குள் நுழைந்துகொண்டிருந்த அம்பலவாணர் முகத்தைச் சுழித்துக்கொண்டு வெளியில் வந்தார்.

ஆசாமியின் முகத்தில் ஆத்திரம் தென்பட்டதும், என்ன சார்! கோப்பிக்கடைக்குள் தராசோடு போகிறீர்? என்று நைஸாகக் கேட்டேன்.

"உமக்குச் சமாச்சாரம் தெரியாதா? ஓய்! என்னைப் போன்ற ஒண்டிக் கட்டைகளை இந்த ஓட்டல்காரங்கள் மழுங்க மொட்டையடிக்கிறாங்க. இவங்களுக்கு ஒருபாடம் படிப்பிக்கத்தான் தராசும் படிக்கல்லும் கொண்டு கிளம்பியிருக்கிறேன்" என்றார் அம்பலவாணர்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன். அவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்:

"மாசுவிலே ஐந்து சதம் கூடியதும் ஓட்டல்காரன் ரொட்டித் துண்டை சின்னதாய் வெட்டி விலையை 4 சதமா உசத்தியிருக்கிறான். ஆனல் கவுண் மேந்திலே கட்டளை போட்டிருக்காங்க. நாலு அவுன்சுக்கு குறையாத ரொட்டித்துண்டுக்குத்தான் நாலு சதம் விலையென்று. அதுதான் இனிமேல்நான் ரொட்டித்துண்டை நிறுத்துப் பார்த்துத்தான் தின்கிறதென்று தீர்மானித்திருக்கிறேன்"

### நான் படும்பாடு சிவனே!

நம் நாட்டில் இப்படிப்பட்ட அம்பலவாணர்கள் ஆயிரமாயிரமாக இருக்கிறார்கள். ஆனல் அத்தனை பேரும் கடைக்குச் சந்தைக்குப் போகும்போது தராசும் படியும் கொண்டுபோக முடியுமா? மேனாடுகளில் போல் வாங்கும் பொருட்களை நிறுத்துச் சரிபார்த்துக் கொள்வதற்கு சந்தைகளிலும் கடைகளிலும் பொதுத் தராசுகளை வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு கடவுள் கையில் தராசை வைத்துப் படைத்திருக்கிறார் போலிருக்கு. நான் அன்றைக்கு ஆட்டிறைச்சிக் கடை ஒன்றுக்குப்போய் கடைக்காரனிடம் மல்லுக்கு நின்று எலும்பில்லாத நல்ல தொடை இறைச்சிவாங்கிக்கொண்டுபோய் ஆத்துக்காரியிடம் கொடுத்தேன். அவள் பொட்டணத்தைப் பிரித்துஇறைச்சியைக்கையில் தூக்கிப்பார்த்துவிட்டு, 'எனக்காகாதுகுத்துறியள்?இதில் ஒன்றே முக்காராத்தல்தான் இருக்கு(ம்)!' என்றாள். நான் தராசை எடுத்து நிறுத்துப்பார்த்தேன். 'கரெக்டா' ஒன்றே முக்காறாத்தல்தான் இருந்தது.

"பாக்கிப்பணத்தை கீழே வையுங்கோ! சிகரெற்றுக்கு பணம் வேண்டுமானல் இப்படியா பொய் சொல்லணும்" என்று சொல்லிக்கொண்டுவந்தவள், "இந்த இறைச்சியில் எலும்பு இல்லை என்று எவன் சொன்னவன்? இரண்டு அவுன்ஸ் எலும்பு இருக்கு" என்று முத்தாய்ப்புவைத்தாள்.

இறைச்சியை வெட்டிப் பார்த்தபோது அவள் சொன்னது போல் ஒருதுண்டு எலும்பு இருக்கத்தான் செய்தது. பெண்களின் கண்ணில் 'எக்ஸ்ரே' கருவியை வைத்துப் படைத்த ஆண்டவனைச் சபித்துக் கொண்டே எனது தோல்வியை ஒப்புக் கொண்டேன்.

—"மாயாவி"

# அயல் வீட்டுக்குத் தீ வைத்தான்

## அவனுக்கு ஐந்து வருடச் சிறை

### மனைவியைப் பிரிந்து வாழக் கையாண்ட தந்திரம்

உலகத்தில் பலர் பலவிதமான காரியங்களைச் செய்கின்றார்கள். அவர்கள் காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் காரணங்களைக் கண்டு பிடித்துக்கொண்டு போவோமானால் அதை விடச் சுவையான பொழுதுபோக்கு இருக்க முடியாது என்றுதான் சொல்லத் தோற்றும். பலர்பல விதமான பைத்தியக்காரத்தனமான காரியங்களைச் செய்கிறார்கள். 'ஏன் செய்தீர்கள்?' என்று கேட்டால் அவர்கள் அதற்குச் சொல்லும் காரணம் விசித்திரமானதாக மட்டுமல்லாமல் சிரிப்பூட்டுவதாகவும் இருக்கிறது.

ஆறு குழந்தைக்குத் தந்தையும், நாற்பது வயதுடையவருமான பிரெஞ்சுக்காரர் ஒருவர் அயல் வீடு ஒன்றுக்கு ஒரு சமயம் நெருப்பு வைத்துவிட்டார். 'எதற்காக அப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டபோது மனைவியை விட்டு நாலைந்து வருடங்கள் பிரிந்திருக்க விரும்பினேன்" என்று கூறினார். அவரது விருப்பம் போலவே அவருக்கு ஐந்து வருடக் கடூழியச் சிறைத்தண்டனை கிடைத்தது.

ஒருசமயம் அமெரிக்க டாக்டர் ஒருவர் நோயாளி ஒருவருடன் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். பிழைத்தெழுந்த நோயாளி அந்த டாக்டர் மேல் வழக்கு வைத்துவிட்டார். வழக்கு வைத்ததன் காரணம் இதுதான்: டாக்டர் நோயாளியுடன் பேசிக்கொண்டிருந்த போது அந்த நோயாளி பிழைக்கமாட்டான் என்று கூறிவிட்டார். அதைக்கேட்ட நோயாளி லாபம் தந்துகொண்டிருந்த தனது வியாபாரத்தை விற்றுவிட்டான். பிழைத்தெழுந்ததும் தனது வியாபாரம் போனதற்குக் காரணம் டாக்டர்தான் எனக் காரணம் சொல்லி வழக்கு வைத்துவிட்டான்.

இங்கிலாந்திலுள்ள கெனட் என்னுமிடத்தில் ஒரு பதினெட்டு வயது வாலிபன் தனது தோட்டத்தைச் சுற்றி எந்தநேரமும் பெருத்த சப்தம் வைக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஓடியபடியே இருப்பான். தோட்டத்திலுள்ள பழங்களைத் தின்ன வரும் பறவைகளை விரட்ட அவன் கையாண்ட தந்திரம்தான் இது.

டச்சுக் கப்பல் ஒன்று கடலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது கப்பல் தலைவன் கப்பலில் பறந்துகொண்டிருந்த கொடிகளை இறக்கும்படி கூறினான். மாலுமிகள் ஆச்சரியத்தோடு கப்பல் தலைவனைப் பார்த்தனர். "கொடிகளை நீரில்இறக்கிக் கழுவிக் காயவிடுங்கள்" என்றான் கப்பல் தலைவன்.

ஒரு சமயம் வெல்ஸ் மாகாணத்திலுள்ள வியாபாரி ஒருவன் தான் இளைப்பாறியபோது "எனது வியாபாரத்துக்கு உதவிசெய்த நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிஉரியதாகும்" என்று விளம்பரம் செய்தான். அந்த விளம்பரத்தைப் பார்த்த அந்நகரத்து மக்கள் அனைவரும் சிரித்தனர். ஏனென்றால் அவன் ஒரு சவப்பெட்டி வியாபாரி.

ஜோசெப் காகிடோ என்பவன் விருந்துக்கு வந்திருந்த தன் நண்பன் ஒருவனைச் சுட்டுக்கொலை செய்து விட்டான். விருந்தில் வைக்கப் பட்டிருந்த பானம் மிகச் சூடாக இருந்ததாகவும், அதைப் பருகியதனால் தனது நாக்கு வெந்து விட்டதாகவும், அதனால் ஆத்திரம்கொண்டு நண்பனைச் சுட்டுவிட்டதாகவும் அவன் காரணம் காட்டினான்,

மோட்டார் ஸ்கூட்டரை லைசென்ஸ் இல்லாமல் ஓட்டிச் சென்றதாக அமெரிக்காவிலுள்ள ஓர்கஹோமா மகாணத்தைச் சேர்ந்த எண்பத்தெட்டு வயதான கிழவர் கைது செய்யப் பட்டு விசாரிக்கப்பட்டார். அவர்லைசென்ஸ்எடுப்பதற்கு விண்ணப்பிக்கவே இல்லையாம். லைசென்ஸ் பெறச்செல்லும்போது தாய் தந்தையரையும் அழைத்துச் செல்லவேண்டுமென அவர் நினைத்தாராம்!

நீதிபதிக்கு முன்னால்

## இரவு ராணிகள் போட்டி!

அழகாக உடையணிந்த பெண்கள் இருவரும் சாரமும் சேட்டும் அணிந்த ஒருஆணும் எதிரிக் கூண்டிற்குள் நுழைந்தனர். மாஜிஸ்திரேட் அவர்கள் மூவரையும் கவனமாகப் பார்த்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்:- சாமாதானத்திற்குப் பங்கம் விளைவித்ததற்காகஇவர்களைப் பொலிஸ் கான்ஸ்டெபிள் ஜினதாசா கைதுசெய்தார் ஐயா!

மாஜிஸ்திரேட்:-என்ன பங்கம்? மானபங்கமா?

பொலிஸ் இன்ஸ்பெக்டர்:- சமாதானத்திற்குப் பங்கம் ஐயா! நீங்கள் சொன்ன பங்கத்திற்கும் இந்தப் பங்கத்திற்கும் தொடர்புண்டு (சிரிப்பு)

மாஜிஸ்திரேட்:-என்ன தொடர்பு?

பொலிஸ் இன்ஸ்பெக்டர்:- விக்டோரியாப் பூங்காவிற்கு அருகில் அந்த ஆணை இரு பெண்களும் ஒவ்வொருகையிலும் பிடித்து வெவ்வேறு பக்கமாக இழுத்துக்கொண்டிருந்தனர். வெவ்வேறு திசையில் இழுத்ததுமல்லாமல் ஒருவரையொருவர் திட்டிக்கொண்டுமிருந்தனர். அப்பக்கமாகச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டெபிள் ஜினதாச அவர்களைக் கைதுசெய்தார்.

மாஜிஸ்திரேட்:- 'மனைவி-ஆசை நாயகி' போட்டா போட்டியா?

பொலிஸ் இன்ஸ்பெக்டர்:- இல்லைஐயா! இருவரும் இரவு ராணிகள். இன்பம் கொடுக்க அவரை இழுத்தார்கள்! சம்பவம் நடந்தபோது இரவு பத்துமணியிருக்கும். தங்களின் இடத்திற்கு அவரை அவர்கள் இழுத்தார்கள்.

மாஜிஸ்திரேட்:- விக்டோரியாப் பூங்காவிற்கு அருகில் கொட்டில்கள் ஒன்றும் இல்லையே!

பொலிஸ் இன்ஸ்பெக்டர்:- கொழும்பு நகரமண்டபத்தின் வெளிச்சாலைகள்தான் இவர்களின் பள்ளியறைகள்!

மாஜிஸ்திரேட்:- (குற்றவாளிகளைப்பார்த்து) குற்றத்தை ஒப்புக் கொள்கின்றீர்களா?

இருபெண்களும்:-ஆம் ஐயா

மாஜிஸ்திரேட்:- (ஆணைப் பார்த்து) நீர் போகலாம். இனிமேல் இப்படியான இப்படியான பெண்களுக்குக் கிட்டவும் போகாதீர்! இருவருக்கும் ஆளுக்கு இருபத்தைந்து இருபத்தைந்து ரூபா அபராதம் விதிக்கிறேன்.

# யுவதியின் 'பிரேசியரை' பிக்பொக்கற் அடித்தான்!

சிலருக்கு சில விஷயங்களில் இயற்கையாகவே திறமை இருப்பது வழக்கம். 'பிக்பாக்கெட், அடிப்பதில் இயற்கையாகவே திறமை பெற்று விளங்கினார் 'ராபின்ஸ்.'

ஆனால் 'ராபின்ஸ்' கொள்ளைக்காரனோ, திருடனோ அல்ல 'பிற்பாக்கெட் மன்னன்' என்ற பெயர் இவருக்குச் சூட்டப்பட்டிருந்தது. எந்த மனிதனிடமிருந்தும், எந்த நேரத்திலும், எந்தப் பொருளையும் களவாடக்கூடிய திறமை இவரிடம் இருந்தது.

மக்கள் கூட்டமாக நிற்கின்ற இடங்களில் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களது பொருளைக்களவாடி அவர்களை மகிழ்விப்பதுதான் இவரது தொழிலாகும்.




ஒரு சமயம் ஒருஇளம்பெண் தன்னிடமிருந்து ஏதாவதொரு பொருளை தனக்குத் தெரியாமல் களவாட முடியுமா என்று இவருக்குச் சவால் விட்டாள். இந்தச் சவால் விடுக்கப்பட்டபோது அந்த மண்டபம் முழுவதும் பெருங் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அந்தப் பெண்ணும் புத்திசாலிதான். அவளிடம் களவாடக்கூடிய பொருள் எதுவுமே இருக்கவில்லை. ஆனாலும் ராபின்ஸிடம் அவளது தந்திரம் பலிக்கவில்லை.

அவளருகில் வந்து 'இந்த மண்டபத்தின் மத்திக்குச் சிறிது என்னுடன் வரமுடியுமா?' என்று கேட்டபடியே அவளை மண்டபத்தின் மத்திக்கு அழைத்துச் சென்றார். "கொஞ்சம் இப்படித் திரும்புங்கள்!" என்று கூறியபடியே அவளை மண்டபத்தின் மத்திக்கு வழிகாட்டிக்கொண்டு வந்தார்.

மண்டபத்தின் மத்திக்கு வந்தானதும் "நமது வேலையைத் தொடங்குவதற்கு முன்னால் இது உங்களுடையதுதானா என்று சிறிது பாருங்கள்!" என்று கூறினார்.

நிமிர்ந்து பார்த்த அப்பெண் 'கீச்'சென்று கத்திவிட்டாள்.

அவர் கையில் அவளதுபிரேசியர் (மார்புக்கச்சு)இருந்தது!

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். பொலீசாருக்குக்கூட இவரது வேலைகள் தெரியும். ஆனால் அவர்கள் இவரைக் கைதுசெய்தது கிடையாது எல்லாருக்குமே தெரியும் இவர் செய்வது அத்தனையும் 'விளையாட்டுக்குத்தான் என்பது!

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல மேல்நாடுகளில்சுற்றித் திரிந்து இவர் தனது திறமையைக் காட்டியிருக்கிறார்.

ஆனால் கடைசியில் இவருக்கும் இந்த தொழில்மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது அவுஸ்திரேலியாவில் ஒரு 'ஷோ பிஸினஸ்' ஆரம்பித்துக்கொண்டு தனது வாழ்வின் கடைசி நாட்களை அமைதியாகக் கழிக்கத் தொடங்கிவிட்டார்.

# மனைவியை அடிக்கலாம்
## கம்புதான் பெரிதாக இருக்கக் கூடாது

ஆங்கில நாட்டுச்சட்டத்தின்படி மனைவியைக் கணவன் அடிக்கலாம்; ஆனல், அவன் உபயோகிக்கும் கம்பு அவனுடைய சுண்டுவிரலுக்குமேல் பருமனய் இருக்கக் கூடாது.

வீட்டுச் செலவுப் பணத்தில் மனைவி மிச்சம்பிடிப்பதைக் கணவன் பிடுங்கிக் கொள்ளலாம்:

வீட்டிலுள்ள பாத்திரம் பண்டங்கள் சகலமும் கணவனுக்கே சொந்தம். தன்னுடையது என்று எதையாவது மனைவி சொன்னல், அது தன் சொந்தப் பணத்தைக்கொண்டுவாங்கியதுதான் என்று அவள் நிரூபிக்க வேண்டும்:

திருமணப் பரிசுப் பொருள்கள் எல்லாம் கணவன் மனைவி இருவருக்கும் சொந்தம். இருவரும் சம்மதித்த பின்னரே அவற்றில் எதையும் விற்கலாம்.

உயிர்வாழ்வதற்கு அவசியமான பொருட்களை மட்டுமே மனைவிக்குக் கொடுக்கக் கணவன் கடமைப் பட்டவன். தலைமயிரைச் சுருட்டையாக்கிக் கொள்ளவோ, நாடகம், சினிமாவுக்குச் செல்லவோ மனைவி விரும்பினல், தான் உயிர் வாழ்வதற்கு அவை மிகவும் அவசியம் என்பதை அவள் நிரூபிக்க வேண்டும்.

மனைவி தனியாகச் சம்பாதிக்கும் பணத்தைக் கணவனின் கணக்கில் பாங்கில் போடுவாளேயானல், அதைக் கணவனுக்கு மனைவி அளித்த இனம் என்றுதான் நீதிபதிகள் மதிப்பிடுவார்கள்:

மனைவி சம்பாதித்துக் கொண்டிருக்கும் பொழுது கணவனுக்குச் சம்பாத்தியமில்லையென்ருல், அவனைப் பராமரிப்பது அவள் பொறுப்பு! ஆங்கிலநாட்டில் மனைவியின் அந்தஸ்து எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? ●

## பல்சுவைப் புதினம்

'ரமணன்' தொகுத்தது

# கொலைகார அடல்ப் ஈச்மன் — பெர்னுட்ஷாவின் பகிடிகள்

பொன்னையா மாஸ்டர் வீட்டிற்குள் காலடி வைத்தார். அவரது புத்திரபாக்கியங்களுக்கிடையில் போர் நடந்துகொண்டிருந்தது. இருவரும் தமது தந்தையைக் காணவில்லை. "டேய்ராஜன்சும்மாயிரு" "பொன்னையா மாஸ்டர் அதட்டினர். "இல்லை அப்பா நான் ஒரு தூங்கின கோழியை வெட்டினதற்கு இவன் என்னை கொலைகாறன் என்று சொல்லுகிருன்"—இது அண்ணைக்கு ஒரு 'குத்து'க் குத்தமுடியாமல் தத்தளிக்கும் பாபுவின் குரல்.

கொலைகாறன் என்றவுடன் மாஸ்டருக்கு அடல்ப் ஈச்மனின் நினைவு வந்தது. "ஏண்டா இவனை அப்படி சொன்னுய்? உனக்குத் தெரியுமா ஒருத்தன்..." ஓகோ! அப்பா கதை சொல்லப்போகின்ருர் என்றவுடன் இருவரும் காதை தீட்டிக்கொண்டார்கள்:

"அறுபதுலட்சம் யூதர்களைக் கொன்ருன். அவனது பெயர் அடல்ப்ஈச்மன். உலகையே தனக்குக் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஆசை கொண்ட ஹிட்லரின் கையாள் இவன். குழந்தை குட்டிகள் என்றுகூடப் பார்த்தானு? எல்லோரையும் இராணுவ ஜீப்பில் ஏற்றிக்கொண்டுபோய், சுட்டுத்தளினன். நச்சுப்புகை கொடுத்துக் கூட ஆட்களைக் கொன்ருன் என்ருல் பாருங்களேன் அவனது கொடுமையை! ஆனல் இன்று அவன்யூதர்களின் அரசாங்கத்திடம் பிடிபட நேர்ந்துவிட்டது. இப்பொழுது 'தான் செய்தது குற்றமல்ல' என்று சாதிக்கிருனும்!"

"அப்படியானல் இப்பொழுது அந்த அடல்ப் ஈச்மன் கரையில் கிடக்கும் மீன்போல் துடிக்கிருனுக்கும்!" அன்றைக்குப் படித்த பழமொழியை ராஜனின் வாய் அவிழ்த்து விட்டது.

"நீ சொல்வது தப்பு" பொன்னையா மாஸ்டர்சிரித்துக்கொண்டே சொன்னர்.

"எதப்பா?"

"உனது உதாரணந்தான். அதுதான் கரையில் கிடந்து துடிக்கும் மீனைப் போல் என்று சென்னுயே"

"சுவிற்ஸிலாந்துகரைகளிலே சில மீன்கள் இருக்கின்றன. அவை கரையில் போட்டாலும் துடிக்காது. தத்தித் தத்தி இரை தேடும். சில மீன்கள் இவ்வாறே மரங்களில் ஏறி பூச்சி புழுக்கள் போன்றவற்றை உண்ணுகின்றன. இப்படிப்பட்ட மீன்களைத்தான். 'ஸ்லோட்டீஸ்' என அழைக்கிருர்கள்!"–பொன்னையா மாஸ்டர் இதைக் கூறிக்கொண்டே முகங்கழுவச் சென்றுவிட்டார். பாபு ஏதோ ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டினன். "பெர்னுட்ஷா நோபல் பரிசையே வேண்டாமென்று திருப்பி அனுப்பினராமே! அதாவது ஒரு லட்சத்து ஐம்பதினுயிரம் பவுண். அதைத் திருப்பி அனுப்பிவிட்டெழுதினராம்:

'எவ்வளவோ கெடுதி செய்யும் இந்த டைனமோவை கண்டு பிடித்த ஆல்பிரெட் நோபலை மன்னித்து விடலாம். ஆனல் மனித உருவம் கொண்ட ஒரு பேய்தான் இந்த நோபல் பரிசைக் கண்டுபிடித்திருக்கவேண்டும்!' என்று. இதை பத்திரிகைகள் எல்லாம் கொட்டை எழுத்தில் பிரசுரித்தன. இதன் பயனுல் பலர் அப்பரிசை வாங்கித் தமக்குதவிசெய்யும்படி வேண்டினர்கள். பெர்னுட்ஷா இறுதியில் இவர்களது தொல்லைபொறுக்க முடியாமல் அப்பணத்தை வாங்கி இலக்கியச் சேவை செய்தார்."

"ஓ, இப்பிடித்தானும் ஒரு முறை..." முகம் கழுவிக்கொண்டு வந்த பொன்னையா மாஸ்டர் சொல்லத் தொடங்கினர்:

"ஒரு லண்டன்சீமாட்டி தன்னை நன்ருக அலங்கரித்துக்கொண்டுபெர்னுட்ஷாவிடம் வந்தாள். ஷாவைப் பார்த்து, 'எங்கே என் வயசைச் சொல்லுங்கள் பார்க்கலாம்' என்ருள். ஷா, சீமாட்டியை மேலுங் கீழுமாகப் பார்த்துவிட்டு "உன்பல்லைப்பார்த்தால் 18 வயது என்றும், உன் சொர்ணக் கூந்தலைப் பார்த்தால் 19 வயது என்றும், உனது வதனத்தைப் பார்த்தால் 14 வயது என்றும் தோன்றுகிறது" என்றும்கூறினர்பெர்னுட்ஷா.


'என்னை நீங்கள் இப்படி புகழ்வது என் மனதிற்கு மிகவும் சந்தோஷத்தை அளிக்கிறது. நன்றி! இருந்தாலும் என் உண்மையான வயதை சொல்லுங்கள் பார்க்கலாம்' என்ருள். ஷா சொன்னர் 'அதுதான் மூன்றையும் கூட்டு. 18, 19, 14 இவற்றைக் கூட்டினல் விடை 51. ஆகவே உன் வயதும் 51 தான். இதைக் கேட்டதும் சீமாட்டியின் முகத்தில் அசடு வழிந்தது!" ●

......சொல்லுக்குறுதி.
★ உங்கள் பற்கள்
★ நோய்களால் கெட்டுப் போகாமல் பாதுகாக்க
★ ஒரே பற்பொடி!


"ராதா" பயோறியா பற்பொடி

பற்சொத்தை, பல்வலி. ஈறுகரைதல். இரத்தம் அல்லது சீழ் கசிதல், வாய்ப்புண். இவற்றை நீக்கிப்
பற்களைப் பளிச்சென வைக்கும்!
— எங்கும் கிடைக்கும் —

சோல் ஏஜண்ட்:
எஸ். சுப்பிரமணியம் அன் கோ,
53, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 541 தந்தி: 'மணியம்'



"ஏனப்பா அழுகிருய்? ஒருமுறை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு மூன்பாக உள்ள சூரியப்பிரகாஸ் அன்றை கிளினேஸிடம் போய்வா, என்னைப்போல் நீயும் 'ஜம்' மென்று கவர்ச்சியாக இருக்கலாம்!"



அப்துல்லா அன் கோ
அனுமதி பெற்ற கண் பரிசோதகர்
கே. கே. எஸ். ரேட், : யாழ்ப்பாணம்.
போன்: 486

## மூன்றாம் கட்சி

பொதுவாக எந்த விஷயத்துக்கும் மூன்று கட்சிகள் உண்டு. நம்முடைய கட்சி, நமது எதிராளியின் கட்சி, என்ற இரண்டும் தான் நம்மில் பெரும்பாலோருக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் இந்தஇரண்டையும் கடந்தமூன்றாவது கட்சியும் ஒன்று உண்டு என்பதை நம்மில் பலர் மறந்து விடுகின்றோம். பெரும்பாலும் அந்த மூன்றாவது கட்சிதான்சரியான கட்சியாகவும் இருக்கும்.

கட்சி அரசியலும், இலக்கிய வட்டாரத்தில் உள்ள குழுக்களும், சமய அடிப்படைகளைப் பேணிக்காக்க விரும்பும் கோஷ்டிகளும் அறிந்தோ அறியாமலோ நம்மிடையே இருகட்சி மனப்பான்மையை வளர்க்கப் பெரிதும் பாடுபடுகின்றன. இருகட்சி மனப்பான்மை வளர்வது நேர்மைக்கும், சுதந்திரத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆபத்தானது என்றே நினைக்கிறேன்.

நம்மிடையேபிரச்சினைக்குரிய பல விஷயங்கள் இருக்கின்றன. பிரச்சினையான பல பிரகிருதிகளும் இருக்கின்றார்கள். இந்தவிஷயங்களைப் பற்றியும், இந்தப் பிரகிருதிகளைப் பற்றியும் மூன்றாம் இடத்தில் நின்று ஒரு பார்வை பார்ப்பது நல்லது என்றே நான்நினைக்கின்றேன்.

மூன்றாம் இடத்தில் நின்று நோக்குவதனால் அந்த இரண்டு கட்சிகளுக்குமே பிடிக்காத ஒரு மனிதனாகவும் நான் ஆகிவிடக்கூடும். ஆனால் அதுபற்றி நான் கவலைப்படவில்லை. மூன்றாவது இடத்தில் நின்றுநோக்கும் போதுதான் உண்மையைக் காணலாம். என்பது எனது நம்பிக்கை. பெரும்பாலான விஷயங்களில் உண்மை வெளிவரும் போது ஒரு பரபரப்பு ஏற்படுகின்றது. பரபரப்பின் பயனாக விவாதங்கள் வளருகின்றன.

பரபரப்பிலும், விவாதங்களிலும் எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. ஆக்கபூர்வமான காரியங்களுக்கும் பரபரப்பும் விவாதங்களும் பெருமளவு துணைசெய்கின்றன.

சர்ச்சைக்கிடமான சில விஷயங்களில் ஒரு முடிவு சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் மூன்றாவது இடத்தில் நின்று நோக்குகின்ற எனக்கு ஏற்படும் என்ற உண்மையும் எனக்குத்தெரிந்தேதான் இருக்கின்றது அப்படியான ஒரு முடிவைச் சொல்லும்போது அதனைச் சற்று அழுத்தமாகவே நான் சொல்ல விரும்புகின்றேன். இரண்டுகட்சியினரையும் திருப்திப்படுத்தக்கூடிய முறையில் 'ஆமாம் சாமி' முடிவுசொல்வது மூன்றாம் கட்சிக்காரனுடைய வேலை அல்ல, அது கட்சியே இல்லாதவனுடைய வேலை ஆகும்.

நல்லது அடுத்த வாரம் சந்திப்போம்.

— மூன்றாம் பேர்வழி

"மாடுமாதிரித் தூங்குகிறான்" என்று இனிமேல் யாரையும் திட்டாதீர்கள். ஏனென்றால்,

# மாடுகள் தூங்குவதேயில்லை!

## பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் நிரூபிக்கிறார்

"சிலர் ஆழ்ந்த நித்திரை செய்வதைக் கண்டால், பலருக்குப் பொறுப்பதில்லை. 'ஏனடா இப்படி மாடு மாதிரி உறங்குகிறாய்? தூங்குமூஞ்சி மாடே!' என்று திட்டுவார்கள் ஆனால் இது சரியல்ல.

'உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு' என்பது பழமொழி. மூளையிலிருக்கும் இரத்தம் இரைப்பைக்கு வந்து விடுவதே இதற்குக் காரணம். இந்த இயற்கை நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, முக்கியமாக மத்தியானச்சாப்பாட்டுக்குப்பின்னர் சிறிது நேரம் படுத்துஉறங்குவது மூளை, இருதயம், இரைப்பை, பித்தப்பை குடல், நரம்புகள் ஆகிய உறுப்புகளுக்கெல்லாம்நல்லதுஎன்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதுவுமல்லாமல், மாடுகள் தூங்குவதேயில்லை என்றஉண்மை பலருக்குத் தெரியாது! 'எனவே, தூங்கு மூஞ்சி மாடே!' என்று திட்டுவதில் அர்த்தமில்லையல்லவா?

வெகு நாட்களாகத் தொழுவம் வைத்திருப்போரும், ஆட்டுப்பட்டிக்காரர்களும், பசுக்களும், ஆடுகளும் தூங்குவதில்லை என்று சற்றுச் சந்தேகத்துடனேயே பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இங்கிலாந்தில் ரெடிங் சர்வகலாசாலையிலுள்ள தேசிய பால் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு. ஸி. ஸி. பால்ஷ் என்பவர், சற்றேனும் சந்தேகமின்றி, ஆடு, மாடு முதலிய இரைமீட்கும் மிருகங்கள் தூங்குவதில்லை என்பதை நிலை நாட்டிவிட்டார்.

லாயத்தில் வளரும் குதிரைகள் நாளொன்றுக்கு ஏழு மணி நேரம் தூங்குவதுண்டு. அதுவும் தரையில் படுத்துக் கொள்ளும்போது ஆழ்ந்த நித்திரை செய்கின்றன. ஆனால் மாடுகள் எப்பொழுதும் தரையில் உருண்டு படுப்பதில்லை. பின்கால்களை மடித்துக்கொண்டு அதன் மேல் வயிற்றைத் தாங்கிக் கொண்டிருக்கும். கழுத்து செங்குத்தாக நிமிர்ந்திருக்கும். முன்கால்களை மடக்கி, அதன்மேல் தலையை வைத்துக் கொள்ளும். இதுதான் மாடு படுக்கும் முறை. இரவு நேரங்களிலும்கூட இப்படித்தான் படுத்திருக்கும். ஆனால் கண்கள் மாத்திரம் எப்பொழுதும் திறந்த வண்ணமேயிருக்கும். அப்படியே தூங்கினாலும் கண நேரம்தான் இமைகளை மூடும். ஒரு சிறு ஓசை கேட்டாலும் போதும், உடனே விழித்துக் கொண்டு சுறுசுறுப்பாக எழுந்து விடும்.

கால் நடைகள் நாளொன்றுக்கு ஒன்பது மணிநேரம் அசை போடுகின்றன. ஒவ்வொரு தடவை அசைபோடும் போதும் ஒரு மணிநேரம் நீடித்திருக்கின்றது இதுவே தூக்கம் போன்றது!

மற்றொரு முக்கிய அம்சத்தையும் கவனிக்க வேண்டும். மாட்டின் 'அசை வயிறு' என்று சொல்லப்படும் முன் வயிறு முழுவதும் நீர்ப்பொருள் நிறைந்திருக்கும். இந்தவயிற்றிலிருக்கும் பொருளை அசை போடுவதற்குக் கொண்டுவரும் சக்தி மிக முக்கியமானதாகும். இதனால், அசைபோடும் வயிற்றைச் சாய்த்தால் ஏதாவது கோளாறு ஏற்பட்டு விடும்.

மாடு எப்பொழுதும் தரையோடு தரையாகப் பக்கவாட்டில் படுப்பதில்லை. மாடு தூங்காததற்கும் இதுவே காரணமாகும். இளங்கன்றுகளுக்கு முன் வயிறு வளராததால் அவை நன்றாகப் படுத்துக் கொள்கின்றன; தூங்கவும் செய்கின்றன!

# 4 மைல் வேகத்துக்கு மேல் ஓடாதே!

## அந்தக்காலத்தில் இருந்த மோட்டார்ச் சட்டவிநோதம்!

இலங்கையின் வீதிகளில் இன்று எங்கு பார்த்தாலும் மோட்டார் கார் மயமாகவேயிருக்கின்றது! இந்த மோட்டார் கார்களெல்லாம் பெட்ரோல் எண்ணெய்யின் உதவியால் ஓடுவது யாவரும் அறிந்த விஷயம். ஆனால், ஆதியில் இன்றைய புகையிரத எஞ்சின்களைப் போலவே மோட்டார் கார்களும் நீராவியின் சக்தி கொண்டு இயக்கப்பட்டனவாம்!

1770ம் ஆண்டு, குக்ஞட் என்ற பிரஞ்சுக் காரர்தான் முதன் முதலில் மோட்டார் காரைச் செய்தார். அதன் சிறிய எஞ்சினை நீராவி விசையாலேயே இயக்கினார். அதற்குத் தீ உண்டாக்குவதற்காக விறகையோ, அல்லது நிலக்கரியையோ தான் உபயோகித்தார். அந்தநீராவி மோட்டார் காரில் இரண்டு பேர்தான் சவாரிசெய்யமுடியும்! மணி ஒன்றுக்கு இரண்டு மைல் வேகத்தில் அது நகர்ந்தது!

முதன்முதலில் பிரிட்டனில் நீராவிக் கார் தோன்றியபொழுது, அதற்குப் பலவித தடங்கல்கள் ஏற்பட்டன. 1861- இல் பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதன்படி, இந்த மோட்டார்கார் மணிக்கு நான்கு மைல் வேகத்திற்கு மேல் ஓடக்கூடாது; அதை-மூன்றுபேர் சேர்ந்து ஓட்ட வேண்டும்; வீதியில் அது போய்க் கொண்டிருக்கும் போது, அதற்கு முன்னால் சிவப்புக் கொடியைப் பிடித்துக்கொண்டு ஒருவன் ஓடவேண்டும்!

1896-ஆம் ஆண்டு தான் இந்த நிர்ப்பந்தங்கள் எல்லாம் பிரிட்டனில் ரத்து செய்யப்பட்டன.

## 8 பரிசுகள் பெற்றவர்



கொழும்பு ஆட்டுப்பட்டித்தெரு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது சென்ற வருஷத்திய எஸ். எஸ். ஸி. மாணவி லெட்சுமி வைத்திய நாதன் எட்டுப் பரிசுகள் பெற்றார். சென்ற வருடத்துச் சிறந்த மாணவியென்ற பட்டமும் இவருக்குக் கிடைத்தது.


## ஸ்ரீ சி. நாகையாவின்

### 4-வது ஞாபகார்த்தம்

நிகழும் பிலவ வருடம் புரட்டாதி மாதம் 8-ந் திகதி (24-9-61) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கீரிமலை ஸ்ரீ வைத்திலிங்க மடத்தில் சைவ ஆலயங்களில் திருமண வைபவம் நடத்தக் கூடாதென்ற கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றியவர்களுக்குப் பரிசளிப்பு நடைபெறும்.

ஏஜண்ட்டுகள், மனேச்சர்கள், கிளாக்குகள் முதலியோர்கள் தேவை.

காரியதரிசி,
ஸ்ரீ லங்கா கஷ்ட நிவாரண சங்கம்
கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்

## களனி நதி தீரத்திலே......

(4-ம் பக்கத் தொடர்சி)

லிய ஆரம்பநாட்களிலிருந்து—வளர்ந்தவர்களாகி அயல் கிராமத்திலுள்ள ஆங்கிலக் கல்லூரியில் எஸ். எஸ். சி. தேறிய பின்புகூட நமது பிணைப்பு நின்றுவிடவில்லை. எமது வாழ்வின் பிணி தீர்க்கும் சர்வசக்தி வாய்ந்த சஞ்சீவி மருந்து கையில் கிடைத்தவிட்டது போன்ற மகிழ்வில் எஸ். எஸ். சி. சித்தியடைந்தவுடன் நானும் நடராசனும் இருந்தோம். நமக்குமட்டுமென்ன? நமது சமுதாயத்தில் பரம்பரை பரம்பரையாக வாழையடி வாழையாக வளர்ந்து வந்திருந்த மனப்பான்மை அதுதானே?

எஸ். எஸ், சி. யைப் பாஸ் பண்ணிவிட்டு இரண்டு வருடம் வேலையெதுவும் கிடைக்காமல் ஊரில் சமூகசேவாசங்கம், கூட்டுறவுச்சங்கம் போன்றவற்றில் ஈடுபட்டு பிரமுகர்கள் மாதிரி 'பொதுப்பணி' யிலீடுபட்டுக் கொண்டிருந்தோம். என்னிலும் பார்க்க நடராசன் இரண்டொரு வயதுகுறைந்தவனென்ருலும் ஊரில் மிகவும்வாயாடியாகவும்எதையும் பின்முன்யோசியாமல் செய்து விடக்கூடிய மனப்பாங்குள்ளவனுகவும்இருந்தான்.

திடீரென நம்மிருவருக்கும் உத்தியோகத்துக்கு அழைப்பு வந்தது! உத்தியோகம் கொழும்பில். நாம்வெவ்வேறு கந்தோர்களில்தொழிலாற்றவேண்டியிருந்தாலும் நமது இருக்கையைக் கூட்டாகவே அமைத்துக்கொண்டோம் நம்இருவருக்குமே கொழும்பு புதிது. சூழல் புதிது. தொழில் புதிது:

எனது மாமனர் ஒருவரது வீடு பாலத்துறையிலிருந்தது: அந்த வீட்டின் முன்னறையை நானும் நடராசனும் பகிர்ந்து கொண்டோம்.

நாங்கள் கொழும்பு சென்றபின் முதல் ஞாயிற்றுக்கிழமை அயலிலுள்ள களனி ஆற்றுப்பக்கம் அதிகாலையிலேயே சென்றிருந்தோம். எனக்கு ஆறு என்ருல் ஒரே ஆசை; என்னையறியாமலே அதில் லயித்துவிடுவேன். இலேசான காலைக்குளிர் உடலில்படஇதமாக இருந்தது. சள, சள என நகைச்சுவை சொட்ட நடராசன் கதை சொல்லிக் கொண்டு வந்தான். ஆற்றங் கரைக்கு வந்துவிட்டோம். காலைச் சூரியன் பொற்கிரணங்களால்பூமித்தாயைத் தழுவி எழுந்துகொண்டிருந்தான்

அந்த அற்புத வனப்பைச் ரசித்துக் கொண்டு நின்ற என்னை நடராசன் உலுக்கி "அதோ பார்" என்ருன்.

ஆற்றைப் பார்த்தேன் குளித்துவிட்டுஒருபேரழகி கரையை நோக்கி வந்து கொண்டிருந்தாள். "நூறு மாக்ஸ் கொடுக்கலாம்" தனக்கேயுரிய துடுக்குத்தனத்தின்படி நடராசனும் அவளுக்கு கேட்கக் கூடியதாகக் கூறினுன்.

எங்களை நோக்கி பாதைக்குவந்த அவள் முகத்தை சிலுப்பி, கனல்கக்கும் கண்களால் ஒரு பார்வை பார்த்தாள், அது விசுவாமித்ரப்பார்வை!

— தொடரும்

நடிப்பு: செல்வி லிண்டா
படப் பிடிப்பு: சிவம்.

## நிதிமந்திரி...பிடித்து விடுவாரா?




மட்டக்களப்பிலிருந்து ஒரு மறுப்புரை

# தோல்வியுற்றவர்களின் பொருமை.

## கல்கி போட்டி முடிவுபற்றி வீண் புரட்டல்கள்!

'கல்கி' நடாத்தியபோட்டியில்ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்கள் கலந்து கொள்ளவில்லையென்று ஒருவாரப்பத்திரிகை தம் பட்டமடிக்கிறது. மேற்படி போட்டியில் தில்லுமுல்லுகள் நடைபெறும் என்று இந்த மு. போ. எழுத்தாளர்கள் முன்கூட்டியே தெரிந்துவைத்திருந்ததால்தான் அவர்கள் போட்டியில்கலந்துகொள்ளவில்லையாம். முன்கூட்டியே இவர்களுக்கு ஏன்தான்சந்தேகமேற்பட்டதோ தெரியவில்லை.

இந்த முற்போக்கு எழுத்தாளர் அகராதியில் இடம் பெற்றவர்கள் யார்? இவர்களுக்கு முற்போக்கு எழுத்தாளர்கள் என்ற பட்டம் எப்படி வழங்கப் பட்டது? தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக்கொண்டு தங்களை விடச் சிறந்த எழுத்தாளர் இவ்வுலகில் ஒருவருமேயில்லையென்ற கர்வத்தோடு உலவும் ஒரு சில எழுத்தாளர்களின் தரத்தை வாசகர்கள்தான் நிர்ணயிக்க வேண்டும்.

முற்போக்கு எழுத்தாளர், புதுமை எழுத்தாளர், வளரும் எழுத்தாளர், வளர்ந்த எழுத்தாளர் இப்படியெல்லாம் சங்கங்கள் அமைத்துக் கொண்டால் மட்டும் எல்லோரும் எழுத்தாளர்களாகி விடமுடியுமா?

எதுஎப்படியிருந்தாலும் தன்னை முற்போக்கு எழுத்தாளர் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தோழர் பொன்னுத்துரை 'கல்கி' போட்டிக்கு மூன்று கதைகளை அனுப்பி வைத்ததோடு தமக்கே முதற் பரிசு கிடைக்கப் போகிறது என்று பலரிடமும் கூறிக்கொண்டு திரிந்தது உண்மை. இதை அவர் மறுக்கவுமில்லை; மறுக்க முற்படவும் மாட்டார்.

போட்டியில் முதற்பரிசு பெற்ற 'நந்தாவதி' என்ற கதை பரிசு பெறத்தகுதியற்றது என்று போட்டியில் கலந்து தோல்வியடைந்த முற்போக்குத் தோழர் பசப்புவது குற்றவாளியே நீதிபதியாக மாறி தீர்ப்பையும் தனக்குத்தானே கூறுவது போன்றதாகும்.

'நந்தாவதி' கதையை எழுதிய நவத்துக்குப்பரிசு கிடைப்பதற்குக் காரணமாயிருந்தவர் வார இதழ் ஒன்றுக்கு ஆசிரியராயிருந்த ஒருவர்தான் என்று மற்ருேர்வாரப்பத்திரிகை மந்திரம் செபிக்கிறது. மேற்படி பத்திரிகை பூடகமாக வெளியிட்ட அந்த ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம் என்பது எல்லோருக்கும் தெரியும். திரு சிவநாயகம் கூறிவிட்டார் என்பதற்காகக் கல்கி நிர்வாகிகள்நடுநிலைமைதவறிவிட்டார்கள் என்று குற்றம்சாட்டுவது எத்தகைய மதியீனம். இங்கு நடைபெறும் கேலிக்கூத்துகளைக்கவனிக்கும் தாயகத்தார் எம்மை எமது பண்பை எமது எழுத்துலக வேந்தர்களை எவ்வளவு தூரம் குறைத்து மதிப்பிடுவர்!

போட்டி முடிவுதேதியான31-12-60 க்குப்பின் 542 கதைகளையும் படித்துப் பரிசீலனை செய்து 15-1-61-ல் வெளியான கல்கியில் பரிசுபெற்ற கதையை எப்படிப் பிரசுரிக்க முடிந்தது என்று மேற்படிவாரப்பத்திரிகை சந்தேகப்படுகிறது.

ஒருகதையின் இரண்டு பக்கங்களை வாசித்துப் பார்க்கும் போதே அக்கதை தரமான கதையல்லாவிடில் அதை ஒருசிறந்த எழுத்தாளன் புரிந்து கொண்டு மிகுதியை வாசிக்காமலே தூரவைத்து விடமுடியும் என்ற உண்மை பலருக்குத் தெரியாவிட்டாலும்பத்திரிகையாளர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

இன்னெரு விஷயத்தையும் இங்கு நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஐந்நூறு கதைகளையும் முடிவுதேதிவரை பரிசீலனை செய்யாமல் வைத்திருக்கவேண்டும் என்று என்ன கட்டாயமிருக்கிறது? கதைகளைப்பரிசீலனை செய்து அவைக்கேற்றபுள்ளிகளை அவ்வப்போதே குழுவினர் குறித்துவைத்திருந்ததால் முடிவுதேதிக்குப்பின்வரும் வாரத்திலேயே பரிசு பெற்றகதையை பிரசுரிக்க முடியாதா?

குறுக்குவழியில்எழுத்தாளராகிவிடப்பலவழிகளைக் கையாளுபவர்கள் நம் மத்தியிலிருக்கிருர்கள். நண்பர்களிடம்போய் 'என்னைப் பற்றி நாலு வார்த்தை மேடையில் பேசக்கூடாதா' என்று மன்ருடுவது, 'என்னைப்பற்றி நாலுவரி எழுதக்கூடாதா' என்று கொஞ்சுவது, இவையெல்லாம் குறுக்குப் பாதைகள் முயற்சி கிரிகையில் வரும் போது நண்பர் பேசியது எழுதியது எல்லாம் உண்மையென்றுதானே நம்பிக் கொள்வது. இதன் முடிவு தன்னைத்தானே ஏமாற்று வந்தத்தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

— நடமாடி

Registered as a newspaper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதா வெளியீடு

# சங்கதி தெரியுமா?

● ஈழத்துத் தமிழ் அரசியல் வார வெளியீடொன்று ஸ்ரார் எழுத்தாளரின் தொடர் கதையை வெளியிடத் தொடங்கிய பின் விற்பனை மேலும் மந்தமாகி விட்டதாம். ஓசியாகக் கிடைத்த கதையின் தரம் பத்திரிகையின் அற்ப சொற்ப செல்வாக்கையும் பாதித்துவிட்டது என்ற சங்கதி இப்போது தான் நிர்வாகத்துக்கு வெளிச்சமாகி உள்ளது.

* *

● தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஒருவர் மாணவர்களிடம் அறவிட்ட மேலதிக உணவுக் கட்டணப் பிரச்சனை இப்போது கல்வி இலாக்காவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மோசடி செய்த பணத்தை அவர் முகாமையாளரிடம் ஒப்படைக்க வேண்டியும் நேரிடலாம்.

* *

● விழாச் சிறுகதைப் போட்டி நடத்திய பத்திரிகை ஒன்று, பிரசுரிக்கத் தகுதியான கதைகளை இப்போது வெளியிட்டு வருகிறது. பரிசு கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அக்கதைகளுட் சில வேறு பத்திரிகாலயங்களுக்குச் சென்று வெளியான சங்கதி போட்டி நடத்திய பத்திரிகைக்குத் தெரியாது போலும். தெரிந்திருப்பின் ஏற்கெனவே இரு பத்திரிகைகளில் வந்த ஒரு கதையை மீண்டும் பிரசுரிக்கவேண்டிய அவசியம் நேரிட்டிருக்காதல்லவா?

* *

● யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர்களில் சிலர் சமீபத்தில் அரசாங்க சேவையைத் துறக்க முன்வந்துள்ளனர். அரசாங்க மொழியை படிக்க வேண்டுமென்ற நிபந்தனையை இவர்களால் நிறைவேற்ற முடியாதென்பதே ராஜிநாமாவுக்குக் காரணமாகும்.

* *

● சுகாதர அமைச்சர் இலங்கையில் இல்லாத சமயம் பார்த்து நடந்த உதவி வைத்திய சுகாதார அதிபர் பதவி நியமனம் ஒன்றைப்பற்றி அவரது அத்தியந்த நண்பரான ஒரு பிரமுகர் சீற்றம் கொண்டுள்ளார். அமைச்சர் திரும்பட்டும் ஆகவேண்டியதைக் கவனிக்கலாம் என்று எதிர்ப்பாளர் கோஷ்டித் தலைவருக்கு அவர் இப்போது ஆறுதல் கூறி வருகிறாராம். ஆயினும் பதவி நியமனக் கடிதத்தைக் கையோடு பெற்று வந்தவர் பலே காரியவாதியாகத்தானிருக்கவேண்டும்.

## 'கோயில் நிர்வாகிகள் அஞ்சல் செலவைப் பொறுக்கவேண்டும்'

— வானொலி நிர்வாகிகள்

### யாழ்–மேயரின் பகீரத முயற்சி!

'நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உற்சவ நிகழ்ச்சி வானொலியில் அஞ்சல் செய்யப்படலாம்' என்று யாழ் மேயர் நமது நிருபருக்களித்த பிரத்தியேக பேட்டியின் போது குறிப்பிட்டார்.

நல்லூர் விழா நிகழ்ச்சிகளை இவ்வருடம் அஞ்சல் செய்ய முடியாதென்றும், போதிய நிதி வசதியின்மையே அதற்குக் காரணமென்றும் அரசாங்கம் கைவிரித்து விட்டது யாவருமறிந்ததே. 'சமீபகாலம் வரை இலங்கையின் மற்றப்பாகங்களில் விசேஷ நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்பட்டன. நல்லூர் விழா விஷயத்தில் மட்டுந்தான் நிதிபற்ருக்குறை ஏற்பட்டுவிட்டதா' என்று இந்துக்கள் அங்கலாய்த்தனர்.

இது பற்றி யாழ் மேயர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் கூறியதாவது:

''விசேஷ நிகழ்ச்சிகளை வானொலியில் அஞ்சல் செய்வதற்கென சென்ற வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதி செலவாகிவிட்டது என்று வானொலி டைரக்டரையும், வானொலி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியையும் நான் பேட்டி கண்ட போது அறிவிக்கப்பட்டது. வானொலி அஞ்சலினல் ஏற்படக்கூடிய செலவைக் கந்தசுவாமிகோயில் நிர்வாகிகள் ஏற்கத் தயாராகவிருந்தால் ஏற்பாடுசெய்து தருவதாக அவர்கள் கூறினர்கள். அவர்கள் கூற்றை ஏற்க நான் மறுத்துவிட்டேன்,

நல்லூர் விழாநிகழ்ச்சிகள் வருடா வருடம் அஞ்சல் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அதற்கான நிதியை நிரந்தரமாக வரவு செலவுத் திட்டத்தில் பிரதி வருடமும் ஒதுக்கவேண்டியது அவர்கள் கடமை. இது திடீரென்று எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட செலவல்லவென்பதை நான் சுட்டிக்காட்டினேன். இது குறித்து திட்ட வட்டமான முடிவொன்றும் இன்னும் ஏற்படவில்லையாயினும் ஒரு நல்லமுடிவு விரைவில் ஏற்படுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது"

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு மேயர் கடிதத்தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிருர்.

பீடி உலகில் பெரும்புகழ் பெற்று
இலங்கையில் தயாராகும் பீடிகளில் மிகச் சிறந்தது இதுவே!

**கல்கி பீடி**

றேஸ் நூல் ஸ்பெஷல்

காரம், மணம், குணம் நிறைந்து பரவசப்படுத்தும்!

உங்கள் மனதுக்குப் பிடித்த அடையாளம்:




இந்த அடையாளத்தை கவனித்து வாங்குங்கள்

றேஸ் நூல் ஸ்பெஷல் பீடி யாழ்ப்பாணத்தில் விசேடமாகக் கிடைக்கும்

**எஸ். சின்னத்துரை அன் பிறதர்**

39 கே. கே. எஸ். றேட், : யாழ்ப்பாணம். போன்: 284

கொழும்பு கிளை: 44, மூன்றும் குறுக்குத்தெரு, கொழும்பு–11, போன்: 6043

தொழிற்சாலை: கல்கிபீடி பாக்டரி, 118-21, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு-13

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி: 'அச்சகம்'